நாவாந்துறைப் படிப்பகம்

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 ஆவணி 03 சனிக்கிழமை (19-08-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:197

# நாடாளுமன்றம் நேற்றுக் கலைப்பு!

# பொதுத் தேர்தல் ஒக்ரோபர் 10 இல்!!

## புதிய அரசு 18 இல் பதவி ஏற்கும்

கொழும்பு, ஒகஸ்ட் 19

**இலங்கையின் பத்தாவது நாடாளுமன்றம் நேற்று நள்ளிரவு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் கலைக்கப்பட்டது. அடுத்த நாடாளுமன்றத்துக்கான தேர்தல் ஒக்ரோபர் மாதம் பத்தாம் திகதி நடைபெறும். 18 ஆம் திகதி பதினொராவது நாடாளுமன்றம் பதவி ஏற்கும்.**

1994 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி பதவிக்கு வந்த இந்த நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கான வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி நேற்று முற்பகல் 10.53 மணிக்கு விடுத்தார்.

எதிர்வரும் 28 ஆம் திகதி முதல் செப்ரெம்பர் மாதம் 4ஆம் திகதி வரை வேட்புமனுக்கள் அந்த அந்த மாவட்டச் செயலகங்களில் ஏற்றுக்கொள்ளப்படவிருக்கின்றன.

இந்தத் தேர்தலில் போட்டியிடுவதற்கு 41 அரசியல் கட்சிகளுக்கு தேர்தல் ஆணையாளர் அனுமதி வழங்கியுள்ளார்.

இலங்கையின் முதலாவது நாடாளுமன்றம் 1947 ஆம் ஆண்டு சோல்பெரி அரசமைப்பின் பிரகாரம் அமைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து இரண்டாம் மூன்றாம் நாடாளுமன்றங்கள் 1952ஆம், 1956ஆம் ஆண்டுகளிலும் 1960ஆம் ஆண்டு இரண்டு நாடாளுமன்றங்களும் பின்னர் ஆறாம், ஏழாம்,

(12ஆம் பக்கம் பார்க்க)



**மக்கள் குறைகேள் செயலமர்வை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா குத்துவிளக்கு ஏற்றி ஆரம்பித்து வைப்பதைக் காணலாம். அருகே யாழ். அரச அதிபர் க.சண்முகநாதன், மாகாண பிரதம செயலர் ஜீ.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் காணப்படுகின்றனர்.**

## இரண்டாவது நாளாக செயலமர்வு

யாழ்ப்பாணம் ஓக.19

யாழ். மத்திய கல்லூரியில் மக்கள குறைகேள் செயலமர்வு இரண்டாவது நாளாக இன்றும் நடைபெறவுள்ளது.

மாகாணசபை அதிகாரிகளும், செயலக அதிகாரிகளும் இதில் பங்கு கொண்டு மக்கள் குறைகளைக் கேட்டு உடன் தீர்வு காண்பர் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## விசாரணைக்கு மூவர் குழு நியமனம்

யாழ்ப்பாணம் ஓக.19

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட முதலாமாண்டு மாணவனான இ.ஷாஜகான் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்த மூவர் கொண்ட குழுவை துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை நேற்று நியமித்தார்.

மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் செல்வி வசந்தி அரசரட்ணம் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள இந்தக் குழுவில் மருத்துவ பீடத்தைச் சேர்ந்த டாக்டர் குணராசசிங்கம், விவசாயபீடத்தைச்சேர்ந்த திருமதி மிகுந்தன் ஆகியோர் இடம்பெறுகின்றனர். (இ-3-9)


## கேரள ஜோதிடர் மூலம் சுப நேரம் கணிப்பு

கொழும்பு,ஓக.19

அடுத்த தேர்தலுக்கான நாள் கேரள மாநிலத்தில் உள்ள ஜோதிடர் ஒருவர் மூலமாகக் கணிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அந்த ஜோதிடர் கணித்துக் கொடுத்த சாதகத்தின்படி நாடாளுமன்றக் கலைப்பு, தேர்தல் அறிவிப்பு யாவும் சுபநேரத்தில் அமைந்ததாகவும் நாடாளுமன்றப் பதவியேற்பு நேரம் குறித்தும் அந்த ஜோதிடர் கணித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## லயனல் பலகல்ல 25 இல் பதவி ஏற்பு



புதிய இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் லயனல் பலகல்ல எதிர்வரும் 25 ஆம் திகதி பதவியேற்க உள்ளார்.

கடந்த ஜுன் மாதம் 14 ஆம் திகதி 55 வயதைப் பூர்த்தி செய்து ஓய்வுபெற்ற லயனல் பலகல்ல, ஜனாதிபதியின் விஷேட பணிப்பின் பேரில் பிரதித்தளபதியாக நியமிக்கப்பட்டிருந்தார்.

தற்போதைய தளபதியாகப் பணிபுரியும் லெப்டினண்ட் ஜெனரல் ஸ்ரீலால் வீரசூரியாவுக்கு வழங்கப்பட்ட சேவை நீடிப்பு எதிர்வரும் டிசெம்பர் மாதம் 15 ஆம் திகதி பூர்த்தியாகின்ற போதும அவர் பாகிஸ்தான் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளதை அடுத்து எதிர்வரும் 24ஆம் திகதி ஓய்வு பெறுகின்றார்.

இதனைத் தொடர்ந்து மறுநாள் பலகல்ல பதவியேற்கின்றார்.

யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதியாகவும், வன்னி மாவட்ட படை நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான தளபதியாகவும் இவர் பணியாற்றியுள்ளார்.

## பலகல்லவுக்கு அச்சுறுத்தல்

புதிய இராணுவத் தளபதியாக எதிர்வரும் 25 ஆம் திகதி பதவியேற்கவிருக்கும் மேஜர் ஜெனரல் லயனல் பலகல்லவுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக இராணுவப் புலனாய்வுத்துறை தெரிவித்துள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## பேருவளையிலிருந்து படகில் இத்தாலி செல்ல முயற்சி!

### 32 இளைஞர்கள் கைது

கொழும்பு ஓக.19

பேருவளையிலிருந்து படகு ஒன்றின் உதவியுடன் சட்டவிரோதமாக இத்தாலிக்குச் செல்ல முயற்சித்ததாகக் கூறப்படும் 32 இளைஞர்கள் நேற்றுக்காலை பேருவளைப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களில் நாலு பேர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள். ஏனையோர் சிலாபம், புத்தளம் மற்றும் வென்னப்புவ பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என பேருவளைப் பொலீஸார் தெரிவித்தனர்.

இத்தாலிக்குச் வெல்வதற்காக மேற்படி இளைஞர்கள் தனித்தனியே

(12ஆம் பக்கம் பார்க்க)

## காயமடைந்த படைஅதிகாரி மரணம்

வவுனியா,ஓக.19

வவுனியாவில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் காயம் அடைந்து கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த லெப்ரினண்ட் திலக் பாலசூரியா நேற்று மரணமானார்.

இந்தத் தாக்குதலில் லெப்ரினண்ட் திலக் பாலசூரியா உட்பட மூன்று படையினர் காயமடைந்தது தெரிந்ததே. சிறுமி ஒருவர் கொல்லப்பட்டிருந்தார். (இ-164)

**அங்கிகள் பலவிதம் கட்டுரைத் தொகுதி நாளை ஞாயிறு வெளிவரமாட்டாது. திங்கள் வெளிவரும்.**

## ஒரே தடவையில் 4000 பேர் நாளை கப்பலில் பயணம்!

### இன்றும் நாளையும் ரிக்கட் வழங்கப்படும்

யாழ்ப்பாணம் ஓக.19

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியிடங்களுக்குச் செல்வதற்காக யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்தில் பதிவு செய்து காத்திருப்பவர்களுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை 4 ஆயிரம் பேர் பயணம் செய்யக்கூடிய விசேட கப்பல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட பிரதித் தளபதி மேஜர் ஜெனரல் நிஹால் மாரம்பேயின் ஏற்பாட்டில் இந்தக் கப்பல்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வேல்முருகு தங்கராசா தலைமையில் பொ.ஐ.முன்னணி யாழில் போட்டி

யாழ்ப்பாணம் ஓக.19

யாழ். மாவட்டத்தில் பொது மக்கள் ஐக்கிய முன்னணி இடதுசாரிகளுடன் இணைந்து எதிர்வரும் தேர்தலில் வேட்பாளர்களை நிறுத்துவதென்று முடிவு செய்துள்ளது.

நேற்று முன்தினம் கொழும்பில் பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் செயலாளரும் அமைச்சருமான டி.எம்.ஜயரத்தின தலைமையில் நடந்த கூட்டமொன்றில் இந்த முடிவு

(12ஆம் பக்கம் பார்க்க)



நேற்று இடம்பெற்ற மக்கள் குறைகேள் செயலமர்வின் போது ஆசிரியர் நியமனத்தில் பாதிக்கப்பட்ட நூற்றுக்கணக்கானோர் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் கூடி நின்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

படங்கள்: பொ.இராஜேஸ்வரன்

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# கண்ணீர் அஞ்சலி



## நா.ஏகாம்பரம்

நல்லூர் சந்தை, கல்வியங்காடு விக்னேஸ்வரா களஞ்சியம், விநாயகர் மில், குகன் ரயர் வேக்ஸ் ஆகியவற்றின் உரிமையாளராகிய நா.ஏகாம்பரம் அவர்கள் நேற்று (18-08-2000) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்ததையிட்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

விக்னேஸ்வரா களஞ்சியம்,
விநாயகர் மில் ஊழியர்கள்.

*நல்லூர் சந்தை,*
*கல்வியங்காடு.* (77459)

# கண்ணீர் அஞ்சலி

எமது கழக உறுப்பினரும்
சவுண்ட் என்ஜினியர்ஸ் உரிமையாளருமாகிய
**எ.அ.மரியாம்பிள்ளை**
அவர்களின் மறைவைக் கேள்வியுற்று துயரடைகின்றோம். அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*யாழ்ப்பாணம் வணிகர் கழகம்.*

*இல.27, நவீனசந்தை (மேல்மாடி),*
*யாழ்ப்பாணம்.* (C/12556)

# நன்றி நவிலல்

## அருளப்பு மரியாம்பிள்ளை

(இளைப்பாறிய அதிபர்)

அன்னாரின் மரணச் சடங்கில் (10-08-2000) கலந்துகொண்ட அனைவருக்கும், எமக்குப் பல வகைகளிலும் உதவிகள் புரிந்தவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், செபவழிபாடுகள் செய்தோருக்கும், மலர்வளையங்கள் வைத்தோருக்கும், அவர் நோயுற்றிருந்த போது அவருக்கு வேண்டிய மருத்துவ உதவிகள் புரிந்த திருச்சிலுவைக் கன்னியர்களுக்கும், அவரை வந்து பார்த்து ஆறுதல் கூறிய குருக்கள், கன்னியர்கள், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மற்றும் அவரை நினைவு கூருமுகமாக 16-08-2000 முதல் நடைபெற்ற செப வழிபாட்டிலும், மதிய போசனத்திலும் பங்குபற்றிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

*859/24, ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (77452)

# 11 ஆவது ஆண்டின் நினைவுகளில்

அன்னை மடியில்
13 - 01 - 1926



அந்நியரின் அழிப்பு
21 - 08 - 1989

## அமரர் முருகர் சின்னத்துரை

(முன்னாள் எழுதுவினைஞர், கல்வியமைச்சு)

திதி: 19-08-2000

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

**மனைவி,**
**மக்கள், மருமகன்,**
**பேரமழலைகள்.**

*குமரன் கோட்டம்,*
*அல்வாய் வடமேற்கு,*
*அல்வாய்.* (77444)

## மோட்டார் சைக்கிளில் வந்து சங்கிலி அறுப்பு

யாழ்ப்பாணம்,ஓக.19

பட்டப்பகலில் வீதியில் நடந்து சென்ற பெண் ஒருவரின் கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலியை மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்கள் அறுத்தெடுத்தனர்.

சங்கிலியை அறுத்த வேளை அப்பெண்சங்கிலியைப் பொத்திப் பிடித்ததால் சங்கிலியின் அரைவாசிப்பகுதி அப்பெண்ணிடம் சிக்கியது.

சுழிபுரத்தில் நேற்றுமுன்தினம் காலை 10.30 மணிக்கு இந்தச் சம்பவம் இடம்பெற்றது. (இ-15)

## விடைத்தாள் மதிப்பீட்டாளர் கவனத்துக்கு

யாழ்ப்பாணம்,ஓக.19

தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையின் இரண்டாவது தொகுதி விடைத்தாள் மதிப்பீட்டாளர்கள் 28ஆம் திகதி கொழும்பு செல்வதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

ஆகவே மதிப்பீட்டாளர்கள் அனைவரும் எதிர்வரும் 22ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்பு வேம்படி மகளிர் கல்லூரியில் இயங்கும் யாழ். கல்வி வலயத்தின் பரீட்சைப் பிரிவுடன் தொடர்புகொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் தெரிவித்துள்ளார். (இ-10)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

பரீட்சை திகதி மாற்றம் பற்றிய

### அறிவித்தல்

இரண்டாம் வருட உடற்கல்வி டிப்ளோமா கற்கைநெறிக்கு 28-08-2000 திங்கள் அன்று ஆரம்பமாக இருந்த பரீட்சைகள் 29-08-2000 செவ்வாய்க்கிழமை அன்று ஆரம்பமாகும்.

28-08-2000 நடைபெற இருந்த உடற்கல்வி, புள்ளி விபரவியல், கூடைப்பந்தாட்டம் ஆகியன 05-09-2000ஆம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளது என்பதை சம்பந்தப்பட்ட மாணவர்கள் கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

***பதிவாளர்***

*17-08-2000* (C/12545)


**ராஜா**
(யாழ்ப்பாணம்)
அர்ஜுன், ரேவதி,
வடிவேல், மணிவண்ணன்
மற்றும் பலர் நடிப்பில்
**சுபாஸ்**
காட்சிகள்: 10-30, 2-00
(புதிய நேரம்)
25-08-2000 முதல்
**பூவேலி**
(C/12325)

**நாகம்ஸ்**
சுன்னாகம்.
ரஜனி, சௌந்தர்யாவின்
**படையப்பா**
(ரீல்ஸ்)
காட்சிகள்:
11.00, 2.30 (புதிய நேரம்)
21 முதல்
(77455)
**அமர்க்களம்**


# மரண அறிவித்தல்கள்

## சங்கரப்பிள்ளை முருகேசு

(ஓய்வுபெற்ற பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளர்)

பருத்தித்துறை ஆத்தியடியைப் பிறப்பிடமாகவும் கதிரவேற்பிள்ளை வீதி, தம்பசிட்டியை வசிப்பிடமாகக் கொண்டவரும் முன்னாள் பருத்தித்துறை நகராட்சி மன்ற உறுப்பினரும் ஓய்வுபெற்ற பதிவாளருமான சங்கரப்பிள்ளை முருகேசு நேற்று (18-08-2000) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் சிவநேசத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற முருகேசு சங்கரப்பிள்ளை - செல்லம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வரும் தயாபரன் (கணக்காளர், தேசிய வீடமைப்பு அதிகார சபை, மன்னார்), காலஞ்சென்ற பகீரதன், வானதி ஆகியோரின் அன்புத் தந்தையும் பத்தினி சிவபாலன் (ஆஸ்திரேலியா), குழந்தைவேல் (சவூதி அரேபியா), மங்கையர்க்கரசி ஸ்ரீஸ்கந்தராசா (வவுனியா), காலஞ்சென்ற ஜெயராம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் கமலாதேவி, அருணகிரிநாதன், சிவசேதுராணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19-08-2000) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும்.

தகவல்:
திருமதி மு.சிவநேசம்
(மனைவி)

(C/12561)

## திருமதி சிவபாக்கியம் வேலுப்பிள்ளை

(கீரிமலை)

கீரிமலையைச் சேர்ந்த திருமதி சிவபாக்கியம் வேலுப்பிள்ளை அவர்கள் நேற்று (18-08-2000) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை (துரை) அவர்களின் அன்பு மனைவியும் நாகராசா (தேநீர்க்கடை, பஸ் நிலையம் முன், கீரிமலை), செல்வராசா (முகாமையாளர், தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சுவர்ணாம்பாள், பவானி ஆகியோரின் மாமியாரும் கோணேஸ்வரன் (கோணேஸ் அக்கடமி), கேதீஸ்வரன், நகுலாம்பிகாதேவி, நகுலேஸ்வரன் (நியூட்டன் அக்கடமி - ஈசன்), தீபன், கௌசலா, சிவதர்சனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (18-08-2000) வெள்ளிக்கிழமை சுன்னாகத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வே.நாகராசா,
வே. செல்வராசா.
(மகன்மார்)

*நாகேஸ்வரி வீதி,*
*சுன்னாகம் மேற்கு, சுன்னாகம்.* (77466)

## நா.ஏகாம்பரம்

(உரிமையாளர், விக்னேஸ்வரா களஞ்சியம், விநாயகர் மில், முன்னாள் குகன் ரயர் வேக்ஸ், நல்லூர் சந்தை, கல்வியங்காடு)

செல்லர் வீதி, நல்லூரைச் சேர்ந்தவரும் திரு. திருமதி நாகசுந்தரம் தம்பதியினரின் செல்வப் புதல்வனும் மண்டைதீவைச் சேர்ந்த காலஞ்சென்ற பரமானந்தம் - சின்னத்தங்கம் தம்பதியினரின் மருமகனுமான நா.ஏகாம்பரம் நேற்றுக்காலமானார்.

அன்னார் வனிதாமணிதேவியின் அன்புக் கணவரும் பாஸ்கரன், ஞானசேகர், சந்திரசேகர் (கொழும்பு), காலஞ்சென்ற குணசேகர், விக்னேஸ்வரி, பிரபாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் மஞ்சுளாதேவியின் (யாழ்.மாநகர சபையின் எழுதுநர்) பாசமிகு மாமனாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு திருநெல்வேலி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
பிள்ளைகள்.

*செல்லர் வீதி, நல்லூர்.* (77458)

## சுப்பிரமணியம் சண்முகராசா

(பிரபல சோதிடர்)

நல்லூர் முத்திரைச் சந்தையடியைச் சேர்ந்த பிரபல சோதிடர் சுப்பிரமணியம் சண்முகராசா காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கனகம்மாவின் அன்புக் கணவரும் பாலசுப்பிரமணியம், நீலம்பிகை, சரஸ்வதி, காலஞ்சென்ற வரதராசா, பாக்கியலட்சுமி, யோகராசா (கனடா), யோகேஸ்வரி, தில்லைராசா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் குமாரசாமி இரத்தினசிங்கம், சந்திரவடிவேல், பவாநந்தராசா, சோதிராணி, வேவிமலர், லிங்காயினி (கனடா), ஜானகி (இந்தியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் தியாகராசா (கொழும்பு), காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம், சேதுராசா, தையலம்மை, சிதம்பரப்பிள்ளை, தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19-08-2000) சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச.பாலசுப்பிரமணியம்,
(மகன்)
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*235, பருத்தித்துறை வீதி,*
*முத்திரைச் சந்தை,*
*யாழ்ப்பாணம்.* (77461)

## கபிரியேல்பிள்ளை சிங்கராயர்

அளவெட்டி (மிருசுவில்)

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் மிருசுவிலை வதிவிடமாகவும் கொண்ட கபிரியேல்பிள்ளை சிங்கராயர் நேற்றுமுன்தினம் (17-08-2000) வியாழக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற மேரி யுஸ்ரினாவின் அன்புக் கணவரும் மேரி யோசேவின் (வவுனியா), ஜெயராசா (மாங்குளம்), அருளம்மா (வட்டக்கச்சி), மேரி சறோஜா (மிருசுவில்), யேசுதாசன் அன்ரன் (பிரான்ஸ்), ஆன்சலா ராஜினி (வவுனியா), பொன்றாசா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அருந்தவசீலன் (குவைத்), பத்திநாயகி (மாங்குளம்), ஜெயராசா (வட்டக்கச்சி), திருநேசன் (அஞ்சல் அலுவலகம், மிருசுவில்), சோபனா (பிரான்ஸ்), யூட்றாஜா (வவுனியா), திலகவதி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்துக்காக இன்று (19-08-2000) சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு மிருசுவில் கத்தோலிக்க சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
டே.திருநேசன்
(மருமகன்)

*மிருசுவில்.* (77443)



கடந்த மாதம் பிரான்ஸில் இடம்பெற்ற கோர விபத்தில் சிக்கிய 'கொன்கோட்' விமானத்தையும் அதன் பாரிய சக்கரங்களையும் படங்களில் காணலாம். விமானத்தள ஓடுபாதையில் காணப்பட்ட ஒரு சிறு தகடு விமானத்தின் சக்கரம் ஒன்றின் ரயரைக் குத்திக் கிழித்ததே விபத்துக்குக் காரணம் என பூர்வாங்க விசாரணைகளின் முடிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விபத்தினைத் தொடர்ந்து 'கொன்கோட்' விமானங்களின் பறப்புகள் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன. (ஐ)

# 'கொன்கோட்' விமானங்கள் மீண்டும் சேவைக்கு வருமா?

## விபத்தினால் வந்த விபரீதம்

லண்டன்,ஓக.19

'எயார் பிரான்ஸு'க்குச் சொந்தமான 'கொன்கோட்' விமானங்களை மீண்டும் விமானப் பறப்புக்குவிடலாமா என்ற சர்ச்சை இப்போது கிளம்பியுள்ளது.

கடந்த மாதம் 24ஆம் திகதி பாரிஸில் இருந்து புறப்பட்ட 'கொன்கோட்' விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகி 113 பேரின் உயிர்களைக் காவு கொண்டது. இந்த விபத்தின் பின்னரே இந்தச் சர்ச்சை எழுந்துள்ளது.

இந்த விபத்தைத் தொடர்ந்து பிரிட்டிஷ் 'எயார்வேய்ஸ்' நிறுவனமும், 'எயார் பிரான்ஸ்' நிறுவனமும் இணைந்து இந்த விமானத்தின் செயற்பாடுகளை மாற்றி அமைக்க வேண்டியதன் அவசியம் பற்றி ஆராய்ந்து வருகின்றன. இதன் காரணமாக 'கொன்கோட்' விமானங்கள் தளத்தைவிட்டுக் கிளம்புவது மாதக் கணக்கில் பின்போடப்படலாம் என நம்பப்படுகிறது.

இந்த நிலையில் -

பிரிட்டிஷ் 'எயார்வேய்ஸ்' நிறுவனம் இந்த விமானத்தின் பயணங்களை செப்ரெம்பர் மாதம் முடியும் வரை ஒத்தி வைத்துள்ளது. பிரிட்டிஷ், பிரான்ஸ் ஆகிய இரு நாடுகளும் 'கொன்கோட்' விமானங்களுக்கு வழங்கிய பறக்கும் தகுதிச் சான்றிதழ்களைத் திரும்பப் பெற்றுள்ளன.

ஓடு தளத்தில் கிடந்த சிறு தகடு ஒன்றின் காரணமாக விமானத்தின் சக்கரம் ஒன்றின் ரயர் வெடித்ததே விபத்துக்கான காரணம் என ஆய்வறிக்கைகள் தெரிவிக்கின்ற போதிலும், இந்த விமானங்களில் தேவையான எல்லா பாதுகாப்பு ஒழுங்குகளும் திருப்திகரமாக செய்யப்பட்ட பின்னரே 'கொன்கோட்' விமானங்கள் மீண்டும் பறக்கவிடப்படும் என்று பிரிட்டிஷ் 'எயார்வேய்ஸ்' நிறுவனத்தின் பணிப்பாளர்களில் ஒருவரான மைக் ஸ்ட்றீட் தெரிவித்துள்ளார்.

இதேவேளை -

விபத்துக்கான காரணங்களை ஆராய்ந்த நிபுணர்கள் ரயர்களின் உறுதித் தன்மைக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டு - திருப்தி அளிக்கும் பட்சத்தில் - பாதுகாப்பு உறுதிப்படுத்தும்வரை 'கொன்கோட்' விமானங்களுக்கு பறக்கும் சான்றிதழ்களை வழங்கக்கூடாது என பரிந்துரை செய்துள்ளனர்.

இதனால் 'கொன்கோட்' விமானங்கள் சேவையில் ஈடுபட நீண்ட காலம் பிடிக்கும் என்பதில் சந்தேகமில்லை. அதுவரை 'கொன்கோட்' விமானங்கள் தளத்தில் கிடக்க வேண்டியதுதான். (ஐ-க)

# ரஷ்ய நீர்மூழ்கிக் கப்பலில் உள்ள பணியாளர்களை மீட்க இறுதி முயற்சி

மொஸ்கோ,ஓக.19

நோர்வே கரைக்கு அருகே கடலடியில் சிக்கியுள்ள நீர்மூழ்கிக் கப்பலில் உள்ள பணியாளர்களை மீட்கும் இறுதி முயற்சியில் ஈடுபட சர்வதேச உதவிகள் விரைந்து அனுப்பப்படுகின்றன.

ரஷ்யாவின் வேண்டுகோளை அடுத்து நேட்டோவின் பணிப்பில் இந்த உதவிகள் வழங்கப்படவுள்ளன.

ஆழ்கடல் சுழியோடிகள் அடங்கிய நோர்வே கப்பல் ஒன்று அவ்விடத்துக்குச் சென்றுள்ளது.

கடலுக்கு அடியில் பெரும் நீர்ச் சுழல்கள் காணப்படுவதால் மீட்பு பணிகள் தாமதமடையலாம் என தெரிவிக்கப்படுகின்றது. இதற்கிடையில் நீர்மூழ்கிக் கப்பலில் பிராண வாயு குறைந்து வருவதால் அங்குள்ள 107 பணியாளர்களும் உயிருடன் இருப்பார்களா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. (க)

# எனக்கு எதிரான அவமதிப்பு மனு எதிர்க் கட்சிகளின் சதித்திட்டம்!

## வங்காளப் பிரதமர் சாடல்

டாக்கா,ஓக.19

தனக்கு எதிரான அவமதிப்பு மனு அவாமி லீக் அரசை அகற்றுவதற்கு எதிர்க்கட்சிகள் செய்யும் பெரிய சதி என்று பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை செய்தியாளர்களிடம் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சமீபத்தில் வெளிநாட்டு செய்தி நிறுவனம் ஒன்றுக்கு நீதித்துறையின் செயற்பாடுகள் குறித்து ஆட்சேபனைக்குரிய கருத்துக்களைக் கூறியதாக பங்களாதேஷ் உச்ச நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கம் ஹசீனா மீது அவமதிப்பு வழக்கு ஒன்றை கடந்த புதன்கிழமை தாக்கல் செய்தது.

அதற்கு பதிலளிக்கும் வகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

நீதித்துறைக்கு எதிராகவோ, அரசியல் சாசனத்துக்கு எதிராகவோ நான் எந்தவித கருத்தும் தெரிவிக்கவில்லை. என்மீது வேண்டாத பழியினை சுமத்தி எனது அரசை ஆட்சியில் இருந்து அகற்றுவதற்கு எதிர்க்கட்சிகள் புரியும் பெரிய சதி இது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த அவமதிப்பு மனு எதிர் வரும் திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும். (ஐ-க)

# நடிகர் ராஜ்குமார் கடத்தப்பட்டதில் முதல்வர் கருணாநிதிக்கு தொடர்பு!

## குற்றஞ்சாட்டுகிறார் ஜெயலலிதா



சென்னை,ஓக.19

**பிரபல கன்னட நடிகர் ராஜ்குமார் கடத்தப்பட்டதன் பின்னணியில் தமிழக முதலமைச்சர் மு.கருணாநிதிக்கு தொடர்பு இருப்பதாக முன்னாள் தமிழக முதலமைச்சரும் அ.தி.மு.க. பொதுச்செயலாளருமான ஜெயலலிதா குற்றஞ்சாட்டியுள்ளார்.**

கருணாநிதி தனது நிர்வாகச் சீர்கேட்டை மக்கள் மத்தியில் இருந்து திசை திருப்புவதற்காக இந்தக் கடத்தல் நாடகத்தைப் பயன்படுத்துவதாகவும் அவர் சாடியுள்ளார்.

இது தொடர்பாக அறிக்கையொன்றை விடுத்திருக்கும் ஜெயலலிதா ராஜ்குமாரைக் கடத்திச் சென்றிருக்கும் சந்தனக் கடத்தல் மன்னன் வீரப்பனை சுற்றிவளைத்து பிடித்து அழிப்பதற்காக விசேட அதிரடிப்படை ஒன்றை மத்திய அரசு அனுப்பவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார். கருணாநிதியின் அரசாங்கம் விசேட அதிரடிப்படையை உரிய முறையில் செயற்பட முடியாமல் தடுத்து வைத்திருப்பதாலேயே வீரப்பன் மிக இலகுவாக நடவடிக்கைகள் மேற்கொள்ள முடிவதாகவும் விடுதலைப்புலிகள் மற்றும் தீவிரவாத அமைப்புகளுடன் வீரப்பன் தொடர்புகளைக் கொண்டிருப்பதாகவும் ஜெயலலிதா தெரிவித்திருக்கிறார்.

ராஜ்குமார் கடத்தப்பட்ட மறுநாள் அதிகாலையிலேயே கர்நாடக மாநில முதலமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா, மத்திய உள்துறை அமைச்சர் எல்.கே.அத்வானியிடம் தொலைபேசியில் தொடர்புகொண்டு ராஜ்குமார் கடத்தப்பட்ட விடயத்தில் மத்திய அரசு தலையிட்டு உதவி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார். ஆனால் இதுகுறித்து எல்.கே. அத்வானியிடம் இருந்து எந்தப் பதிலும் வரவே இல்லை என்று அவரே வேதனையுடன் சொல்லி இருக்கிறார்.

சில தினங்களுக்கு முன்பு பெங்களூருக்கு வந்த மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் பேட்டி அளிக்கையில், திருடர்களை, கொலைகாரர்களைப் பிடிக்க இராணுவத்தை அனுப்பமுடியாது. இந்தப் பிரச்சினையை மாநில அரசுகளே தீர்த்துக் கொள்ளவேண்டும். இது காவல் துறையினர் எதிர்கொள்ள வேண்டிய பிரச்சனையே தவிர இராணுவம் எதிர்கொள்ள வேண்டிய பிரச்சினை அல்ல என்று கூறித் தட்டிக்கழித்து விட்டார்.

இதுவரை காவல்துறை உயர் அதிகாரிகள், காவலர்கள், வனத்துறை ஊழியர்கள் உட்பட 130 பேரை சந்தனமரக்கடத்தல்காரன் வீரப்பன் கொன்றிருக்கிறான். படுகொலை செய்யப்பட்டவர்களில் 119 பேர் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள். 119 தமிழர்களை படுகொலை செய்த வீரப்பனை தமிழர் தலைவன் எனப் போற்ற முடியுமா? இது அடுக்குமா?

இப்படி படுபாதக செயல்களைச் செய்த கொடிய கொலைகாரன் வீரப்பனுக்கு பொது மன்னிப்பு தர வேண்டும் என்று பா.ம.க. தலைவர் ராமதாஸ், ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, மத்திய அமைச்சர் ரங்கராஜன் குமாரமங்கலம், புதிய தமிழகம் கட்சித்தலைவர் கிருஷ்ணசாமி, மதுரைபழ. நெடுமாறன் மற்றும் சில சங்கங்களின் தலைவர்கள் சொல்லி இருப்பது மிகமிக வெட்கக்கேடானது. கடும் கண்டனத்துக்குரியது - என்று அவர் மேலும் கூறியுள்ளார். (ஐ-க)

# மத்தியகிழக்கு சமாதானப்பேச்சை மீண்டும் ஆரம்பிக்க ரகசிய முயற்சி

வாஷிங்ரன்,ஓக.19

காம்ப்டேவிட் உச்சி மாநாடு தோல்வி அடைந்ததை அடுத்து இஸ்ரேல் - பலஸ்தீன அமைதி ஒப்பந்தத்துக்கான வழிவகைகளை மதிப்பிட அமெரிக்கத் தூதுவர் டெனிஸ் றொஸ் இருபகுதியினருக்கும் இடையே பேச்சுக்களை நடத்தி வருகின்றார்.

இரகசியமான ஓர் இடத்தில் இந்த சந்திப்பு நேற்றுமுன்தினம் முதல் நடைபெற்று வருகின்றது.

இச்சந்திப்பில் இஸ்ரேலின் பிரதிநிதியாக இஸ்ரேலின் தற்காலிக வெளியுறவு அமைச்சர் பென் அவியும் - பலஸ்தீன பிரதிநிதியாக அமைச்சர் சாயெட் எரிக்காட்டும் கலந்துகொண்டு பேச்சுக்களை நடத்தி வருகின்றனர்.

இந்தச் சந்திப்பின் பின்னர் எகுட் பராக்கும், யஸீர் அரபாத்தும் ஜெருசலத்தை உள்ளடக்கிய பல்வேறு சிக்கலான பிரச்சினைகள் தொடர்பாக ஆக்கபூர்வமான தீர்மானங்களை எடுக்க முன்வருவார்களேயானால் அமெரிக்க அதிபரே முன்னின்று இன்னொரு சந்திப்பை ஏற்பாடு செய்யத் தயாராக இருப்பதாக அமெரிக்க மூத்த அதிகாரி ஒருவர் வாஷிங்ரனில் தெரிவித்துள்ளார்.

காம்ப்டேவிட்டில் நடைபெற்ற பேச்சுக்களில் பலஸ்தீன நாட்டின் எல்லைகள் பற்றியும் யூதக் குடியேற்றங்கள் பற்றியும் சில உடன்பாடுகள் ஏற்பட்ட போதிலும் எழுத்து மூலம் எதுவும் உறுதிப்படுத்தாத நிலையில் ஜெருசலேமின் அந்தஸ்து தொடர்பாக எழுந்த சர்ச்சையினால் அப்பேச்சுக்கள் முறிவடைந்தமை தெரிந்ததே. (க)

# தடா கைதிகளுக்கு எதிரான வழக்குகளின் தீர்ப்பு இன்று

## வீரப்பனின் நிபந்தனை நிறைவேறுமா?

கர்நாடகம்,ஓக.19

சந்தனமரக் கடத்தல் வீரப்பன் முன் வைத்த நிபந்தனைகளில் ஒன்றான 51 தடா கைதிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை விலக்கிக்கொள்வது குறித்து இன்று கர்நாடக நீதிமன்றம் தீர்ப்பு வழங்கவுள்ளது.

இவர்கள் மைசூர் சிறைச்சாலையில் சிறை வைக்கப்பட்டுள்ளனர்.


இந்த 51 கைதிகளுக்கும் எதிரான வழக்குகள் விலக்கிக்கொள்ளப்பட வேண்டும் என அரசு தரப்பு தனி வழக்கறிஞர் நிதிமன்றைக் கேட்டுக் கொண்டபோது சநடதன மரக் கடத்தல் வீரப்பனால் சுட்டுக் கொல்லப்பட்ட காவல்துறை உதவி ஆய்வாளர் சக்கீல் அகமத்தின் வழக்கறிஞர் அதனை எதிர்த்து வாதிட்டார். இதனால் விசாரணை நடத்திய நீதிபதி இன்று இது தொடர்பான தீர்ப்பை வழங்கவுள்ளார்.

கன்னட நடிகர் ராஜ்குமாரை விடுவிப்பதற்கு வீரப்பன் விதித்த பத்து நிபந்தனைகளில் இந்த 51 தடா கைதிகளுக்கும் எதிரான குற்றச்சாட்டை விலக்கிக் கொள்வதும் உள்ளடங்குகின்றது. (ஐ-க)

உலக அரங்கில்

# பயங்கரவாதத்தைக் கைவிடும் அமைப்புக்களுடன் பேசத் தயார்!

## அத்வானி அறிவிப்பு



ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடும் அனைத்து தரப்பினரும் தமது நடவடிக்கைகளைக் கைவிட்டால் அவர்களுடன் பேச்சு நடத்த இந்திய அரசு தயாராகவுள்ளது. அதேநேரம் வன்முறைகளுக்கு எதிரான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

இந்திய உள்துறை அமைச்சர் எல்.கே.அத்வானி இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார்.

நேற்றுமுன்தினம் தமது அமைச்சுக்கான நாடாளுமன்ற ஆலோசனைக்கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இந்த அழைப்பை விடுத்தார்.

பாகிஸ்தான் இந்தியாவுடனான சமரசப் பேச்சுக்களுக்கான வாய்ப்புக்களை சீர்குலைத்தது குறித்து காஷ்மீர் மக்கள் கவலை கொண்டுள்ளனர். சமரசப் பேச்சுக்கள் மூலம் காஷ்மீரில் இயல்பு நிலையை ஏற்படுத்துவதற்கு அரசு தொடர்ந்து முயற்சி செய்து வருகின்றது. அதே நேரம் இந்திய இராணுவத்தினர் விழிப்புடன் இருந்து தீவிரவாதிகளின் அச்சுறுத்தல்களை சமாளிப்பர் என்றும் அத்வானி தெரிவித்தார்.

போட்டோ ஸ்லெக்ற் டிலக்சனா அழகுமாடத்தின்

அனுசரணையுடன்

## உடுவில் மத்திய விளையாட்டுக்கழகம் நடத்தும்

## மாபெரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி

ஆறுபேர் பங்குபற்றும் ஆறுபந்துமாற்றுக் கொண்ட சுற்றுப்போட்டியை கழகம் நடத்த உள்ளது.

விண்ணப்பப்படிவத்தைப் பின்வரும் இடங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

1. சுதா புத்தகசாலை — கொக்குவில்.
2. போட்டோ ஸ்லெக்ற்—மருதனார்மடம்.

**விண்ணப்ப முடிவு திகதி: 25–08–2000**

செயலாளர்

உடுவில் மத்திய விளையாட்டுக்கழகம்.

(சி/12553)



## ஒலிபெருக்கி உடன் தேவை

கையில் கொண்டுசென்று விளம்பரம் செய்யக் கூடிய நல்ல நிலையில் உள்ள ஒலிபெருக்கி (ஸ்பீக்கர்) புதியதாக இருத்தல் அல்லது சிறந்த பாவனையில் உள்ளதும் விரும்பத்தக்கது.

உடன் தொடர்புகளுக்கு;-

உரிமையாளர்,
லாலா சோப் தொழிற்சாலை.
அச்சுவேலி.

(சி/12542)


## 90ஆம் நாள் நினைவஞ்சலி



## திருமதி புனிதவதி கதிர்காமநாதன்

தாயின் மடியில் 16-08-1952 — இறைவன் அழைப்பில் 22-05-2000

பாவங்கள் மலிந்த மண்ணில் புண்ணியவதியாக
புனிதமாய் வாழ்ந்தாயம்மா!
தவத்தைப் போற்றி தற் கொண்டானை தகை சான்ற
சொல்லால் காத்தாயம்மா!
நவலட்சுமியாக வாழ்கவென நனி சார்ந்த கௌதமியை
மகளாய்ப் பெற்றாய் அம்மா!
நாவளம் நிறைந்த கௌதமனை நானிலம் சிறக்க
வளர்த்தெடுத்தாயம்மா!
வானம் இடிந்து விழுந்தது போல் பேரிடியொன்று எமக்கு
செய்தியாக வந்ததம்மா!
நனவுகள் யாவும் கனவுகள் மாறக் காலனவன்
— கிபிர் வடிவில்
உன்னுயிரைக் காவு கொண்டானம்மா!
ஞானம் அழிந்து மதிகெட்டு திகைப்பால்
உணர்வு இழந்ததம்மா!
தானம் செய்யும் இந் நாளில் தாயே!
நின் நினைவு மீட்குதம்மா!
தொண்ணூறு நாளென்ன தொள்ளாயிரமாண்டுகள்
- கழிந்தாலும்
துயரம் தான் தீருமோ!
எண்ணிய காவியங்கள் யாவும் பாடினாலும்
கவலை தான் மாய்ந்திடுமோ!
கண்கலங்கித் தாய்க்காகக் காலமெல்லாம்
தவிக்கின்றோம்.

**கணவன், பிள்ளைகள்,
அண்ணன்மார், அக்காமார், தம்பிமார்,
தங்கை, மச்சான்மார், மச்சாள்மார்,
மருமக்கள், பெறாமக்கள்.**

ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை.

(77456)

## விளையாட்டுப் போட்டி

சாவல்கட்டு மகாத்மா பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப்போட்டி கடந்த 10 ஆம் திகதி வியாழக்கிழமை மகாத்மா சனசமூக நிலையத் தலைவர் ரீ. விஜயகுமார் தலைமையில் மகாத்மா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. (ஐ-9)

## கைதான நபர் ஆஜர்

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் உடைக்கப்பட்டு பொருள்கள் களவாடப்பட்ட சம்பவம் தொடர்பான குற்றச்சாட்டின் பேரில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த நபர் ஒருவர் நேற்று முன்தினம் யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

கிறிஸ்ரியன் எல்மோராஜ் தயாபரன் என்பவரே நீதிமன்றத்தில் நீதிவான் பா. சுப்பிரமணியம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டவர்.

வழக்கு விசாரணை எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ஐ-9)

## இன்று

சுன்னாகம் பாரதி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாரதி சனசமூக முன்றலில் சனசமூகத் தலைவர் க. மெய்யழகன் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி. தெற்கு பிரதேச சபைத் தலைவர் மா. செல்வராசா கலந்து கொள்வார்.

பாரதி சனசமூக நிலையமும், சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கமும் இணைந்து இந்த நிகழ்வினை ஏற்பாடுசெய்துள்ளன. (க)

★ ★ ★

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கும் பாலு மகேந்திராவின் 'மூடுபனி' என்னும் தமிழ்த் திரைப்படம் வீடியோக் காட்சியாக இன்று காலை 10 மணிக்கு பல்கலைக் கழகத்தின் புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

ஆர்வமுடையோர் இதனைப் பார்வையிடலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

★ ★ ★

ஊர்காவற்றுறை மகாமாரி சனசமூக நிலைய பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு சனசமூக நிலையத் தலைவர் எஸ். சிறிதரன் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந. மதனராஜாவும் சிறப்பு விருந்தினராக யாழ். செயலக பிரதித் திட்டப் பணிப்பாளர் கா.. பாலகிருஷ்ணனும் கலந்துகொள்ள உள்ளனர். (இ-73(

## நூலகப் பிரிவு இயங்குகிறது

யாழ்ப்பாணம், ஓக. 19

பருத்தித்துறை தம்பசிட்டி சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலைய நூல் விநியோகப் பிரிவு மீண்டும் கடந்த முதலாம் திகதி தொடக்கம் ஆரம்பமாகியுள்ளது.

வாரத்தில் சனி, ஞாயிறு, செவ்வாய், வியாழன் ஆகிய தினங்களில் பிற்பகல் 4 மணி 30 நிமிடம் முதல் 6 மணி வரை நூல்களை இரவல் பெற்றுக் கொள்ளலாம் என சனசமூகநிலையச்செயலாளர் அறிவித்துள்ளார். (ஐ-15)

## சமய சந்நிதிகளில்

விடத்தற்பளை புதுக்குளம் அருள்மிகு அம்பாள் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.45 மணி முதல் 12.45 மணிவரையுள்ள சுபவேளையில் நடைபெறும்.

கும்பாபிஷேகத்துக்கான கிரியைகள் இன்று அதிகாலை 6 மணிக்கு ஆரம்பமாகும்

★ ★ ★

யாழ். வண்ணை பிறவுண் வீதி பத்திரகாளி அம்பாள் ஆலய புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6.50 மணி முதல் 7.50 மணி வரையுள்ள சுபவேளையில் நடைபெறும்.

இன்று சனிக்கிழமை காலை 8 30 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை அடியவர்கள் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வும் இடம்பெறும். (க)

★ ★ ★

மல்லாகம் பழம்பிள்ளையார் கோயில் வருடாந்த மஹோற்சவம் இன்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

இம் மஹோற்சவத்தின் ரதோற்சவம் எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமையும் தீர்த்தோற்சவம் மறுநாள் செவ்வாய்க்கிழமையும் இடம்பெறவுள்ளன. (க 173)

★ ★ ★

நீர்வேலி புனித பரலோக அன்னை ஆலய வருடாந்த நவநாள்கள் பங்குத்தந்தை அருட்திரு க. அருள்நேசன் அடிகளாரின் தலைமையில் கடந்த 11 ஆம் திகதி அன்று ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

இறுதி நவநாள் வழிபாடு இன்று சனிக்கிழமை மாலை 5 00 மணிக்கு திருப்பலி, நற்கருணை வழிபாடு என்பவற்றுடன் இடம்பெறும்.

திருவிழாத்திருப்பலி நாளை ஞாயிறு காலை 7.30 மணிக்கு யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் அருட்திரு ஜே.பி. இ. செல்வராஜா அடிகளாரால் ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியைத் தொடர்ந்து வழமைபோல் திருச்சுருப பவனியும் ஆசீரும் இடம்பெறும். (ஜ-30)

★ ★ ★

அராலி மேற்கு – கோட்டைக்காடு நொச்சியம்பதி ஸ்ரீ விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்குகொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத்தினங்கள் நடைபெறும்.

சப்பறத்திருவிழா எதிர்வரும் 27 ஆம் திகதி பிற்பகல் 5 மணிக்கும், தேர்த் திருவிழா 28 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கும், தீர்த்தத் திருவிழாவும் செவ்வாய்க்கிழமைமுற்பகல் 10 மணிக்கும்நடைபெறவுள்ளன. (க-30)


## சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம்

## வருடாந்த பொதுக் கூட்டம் 2000.

காலம்: 10—09—2000 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: காலை 10 மணி (இலங்கை நேரப்படி)
இடம்: யாழ். மத்திய கல்லூரி தம்பர் மண்டபம்

பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்பின் 27-8-2000ஆம் திகதிக்கு முன் கழகச் செயலாளரிடம் சமர்ப்பிக்கவும்.

(அங்கத்தவர்களுக்கு தனிப்பட்ட அழைப்பு கிடைக்காவிடினும் இந்த அழைப்பினை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.)

ஜெ. முகுந்தன்
செயலாளர்.

சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம்.

(சி/12560)



## சித்த மருத்துவ மாணவர் மன்றம்

யாழ். பல்கலைக்கழகம்

## அறிவித்தலில் மாற்றம்

நேற்று 18 - 08 - 2000 அன்று 'உதயன்' பத்திரிகையில் வெளியான விளம்பரத்தில் நூல், மற்றும் நிதி சேகரிக்கும் நோக்கோடு உங்களைத் தேடிவருவதாக அறிவித்திருந்தோம். எனினும் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் எமது நூலகத்துக்குப் பெருமளவு நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளதாக அறிவித்தமையினால் நிதி சேகரிப்புத் திட்டம் கைவிடப்பட்டுள்ளது. வைத்திய நூல்களை அன்பளிப்புச் செய்யவிரும்புபவர்கள் சித்தமருத்துவத்துறையுடன் தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி.

சித்தமருத்துவ மாணவர்கள்.

(77463)



## T. R. R. O
## Computer Training Center

பயிலுநரின் வசதி கருதி
எமது நிறுவனத்தின் புதிய கிளை
K. K. S வீதி, மருதனார்மடச் சந்தியில்
(இராமநாதன் கல்லூரிக்கு முன்பாக)
21 – 08 – 2000 அன்று

ஆரம்பமாக உள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

Director.

(சி/12558)

உதயன்

## அதிசயப் பிரமாணம்

பல ஆண்டுகள் சேவை செய்தும் தமக்கு பதவி உயர்வு கிடைக்கும் வாய்ப்பு இல்லாமற் போய்விட்டதே என்று மத்திய வயதான ஆசிரியர்கள் பலரும் விசனம் அடைந்துள்ளனர்.

கல்வித் தகைமை, சேவை மூப்பு ஆகியனவற்றைப் புறக்கணித்து, வயதுக்கு முன்னுரிமை கொடுத்துப் பதவி உயர்வும் சம்பள உயர்வும் வழங்கும் அரசாங்கத்தின் அதிசயமான பிரமாணமே அவர்களின் விசனத்துக்குக் காரணமாகும்.

ஆசிரியர் சேவையின் வகுப்பு - 1க்குப் பதவி உயர்வும் அதன் மூலம் சம்பள உயர்வும் பெறுவதற்கு வகுப்பு-2 இல் உள்ளவர்கள் இந்த வருடம் டிசெம்பர் மாதத்தில் ஐம்பது வயதைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும் என்பதே அரசாங்கத்தின் இரண்டாயிரமாம் ஆண்டின் அதிசய விதியாகும்.

இந்த வருடம் இலங்கையில் தேர்தல் ஆண்டு எனினும் அரசாங்கம் ஆயிரக்கணக்கான ஆசிரியர்களுக்கு அநீதி இழைக்கும் தனது இந்த விஷேட ஏற்பாட்டினைக் கொண்டு வந்துள்ளது.

இந்த விஷேட விதியினால் தனது தரப்புக்கு ஏதோ ஒரு வகையால் வாக்கு வளத்தைப் பெருப்பிக்கும் வாய்ப்பு உண்டு எனக் கண்டு பிடித்தமையினாலோ என்னவோ, இப்படி ஒரு புதுமையான பிரமாணத்தைக் கொண்டு வந்திருக்கிறது அரசு!

1995ஆம் ஆண்டில் ஆசிரியர் சேவை அறிமுகப்படுத்தப்பட்டதில் இருந்து சேவைக்காலப்பயிற்சி, தொழில்சார் மீளாய்வு, மீள்பயிற்சி, பரீட்சைகள் என்பன முறைப்படி நடத்தப்படாமல் கல்விப் பகுதி சோம்பிக் கிடந்தது. அதனால் ஆசிரிய சேவை உள்ளீர்ப்பின் போது உச்சச் சம்பளம் பெற்ற வகுப்பு-2-1 ஆம்தர ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு கடந்த ஐந்து வருடங்களாக வழங்கப்படவில்லை.

அரசாங்கம் தனது இந்தக் குறைபாடுகளை 'போட்டு மேவுவதற்காகவே' அதிசய - விஷேட - ஏற்பாட்டைச் செய்திருக்கிறது. இவ்வருடம் டிசெம்பர் 31 ஆம் திகதி வரையே இந்தப் புதிய விதி நடைமுறையிலிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளதால் இப்போது பாதிக்கப்படுவோருக்குப் பின்னர் நிவாரணமும் கிடைக்க வாய்ப்பில்லை.

ஆசிரியர்களுக்கான இந்த அதிசயத் திட்டத்தின் கீழ் புள்ளி அடிப்படையிலும் வயது அடிப்படையிலும் வகுப்பு-1க்குப் பதவி உயர்வு வழங்க ஏற்பாடாகி இருக்கிறது. இதில் அதிசயம் என்னவென்றால், அதிக கல்வித் தகைமை உள்ள ஆசிரியர்கள் நிர்ணயிக்கப்பட்ட 20 புள்ளிகளைப் பெற்றாலும் கூட, 50 வயதுக்குக் குறைந்தவர்களாக இருந்தாலும் - ஒரு சில மாதங்களால் குறைந்திருந்தாலும் - பதவி உயர்வு கிடைக்கமாட்டாது.

இந்தப் பிரமாணத்தில் இன்னொரு விநோதமும் உண்டு. ஒரே ஆண்டில் நியமனம் பெற்ற வயது வித்தியாசம் உடைய இருவரில் ஒருவருக்குப் பதவி உயர்வு கிடைக்க, வயதில் இளையவருக்கு அந்த வாய்ப்பு மறுக்கப்படுகின்றது. இந்தப் பாகுபாடு பெரும் அநீதியாகும். சம்பந்தப்பட்ட ஆசிரியரின் பதவி உயர்வுக்கான அடிப்படை உரிமைகளை மறுப்பதாகவும் அமையும்.

மேலும் சேவையில் இளையவர்களாக உள்ளவர்கள் தம்மை விடச் சேவையில் மூத்தவர்களைத் தாண்டி, (வயது காரணமாக) பதவி உயர்வு பெறுவதற்கு வகை செய்யும் இந்த அதிசய - விஷேட - திட்டம் ஆசிரியர்களுக்கிடையே பெரும் ஏற்றத் தாழ்வுகளை உருவாக்கப் போகிறது. தாழ்வுச் சிக்கல்களையும் கொண்டு வரும்.

இதன் பெறுபேறு என்னவாகும்? கல்வித் தகைமையும், கற்பிக்கும் அனுபவமும் உள்ள ஆசிரியர்கள் விரக்தி நிலைக்குத் தள்ளப்படுவார்கள் - உளத்தாக்க முற்றுப் பணியில் உரிய அக்கறை கொள்ளாதிருப்பர். இது உளவியல். அதன் விளைவு - மாணவர்களுக்கான ஏற்கனவே நலிந்து போயுள்ள கல்விப் போதனை மேலும் தேய்ந்து போகும்!

## பாடசாலை ஆய்வு கூடங்களுக்கான இரசாயனப் பொருள்களை பெற்றுத்தர நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஓக.19

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்குத் தேவையான ஆய்வுகூட இரசாயனப் பொருள்களை பெற்றுத் தருவதற்குரிய நடவடிக்கைகள் குறித்துக் கொழும்பில் உள்ள அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு ஆவன செய்யப்படும்.

மேற்கண்டவாறு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ்.நகரில் உள்ள ஈ.பி.டி.பி. தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற யாழ். மாவட்டத்தின் கல்வி அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலை நிறைவு செய்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் யாழ். அரசாங்க அதிபர் க.சண்முகநாதன், மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் கே. பரமேஸ்வரன், மாகாண பொது நிர்வாக கூட்டுறவு அமைச்சின் செயலாளர் கே.பரமலிங்கம், மாகாணப் பணிப்பாளர் எஸ்.சிவானந்தன், திட்டமிடல் அமைச்சு செயலாளர் எஸ். ரங்கராஜா, மாகாண திறை சேரிப் பதில் பிரதம கணக்காளர் ஆ.செல்லத்துரை, பொதுச்சேவை ஆணைக் குழு செயலாளர் திருமதி கே.சிவ சிதம்பரம் உட்பட யாழ். மாவட்ட மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் ச.நா. தணிகாசலம்பிள்ளை, வலயக் கல்விப்பணிப்பாளர்கள், கோட்டக் கல்வி அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், மற்றும ஈ.பி.டி.பி. கட்சியின் யாழ.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் நிலவும் கட்டடங்கள் இன்மை, தளபாடங்கள் பற்றாக்குறை, ஆளணிப் பற்றாக்குறை, ஆசிரிய இடமாற்றங்கள், கற்றல் உபகரணங்கள் இன்மை, கணனித் தேவைகள் போன்ற பல விடயங்கள் பற்றியும் அதிபர்களால் எடுத்துக் கூறப்பட்டதை அடுத்து குறிப்பிட்ட விடயங்களுக்கான தீர்வுகள் பற்றிக் கலந்துரையாடப்பட்டது. பாடசாலைகள் சிலவற்றின் அடிப்படைப் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக நிதி ஒதுக்கீடுகளும் செய்யப்பட்டன.

கலந்துரையாடலில் கலந்து கொண்ட பாடசாலை அதிபர்கள் பலராலும் அவர்களது பாடசாலைகளின் தேவைகளே பிரஸ்தாபிக்கப்பட்டன. அநேகமான பாடசாலைகளுக்கு தனது தளபாடங்களைப் பெற்றுக் கொள்வதற்கென நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டன. அத்துடன் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம், உடுப்பிட்டி மகளிர் கல்லூரி ஆகியவற்றுக்கு மாடிக் கட்டடங்கள் அமைப்பதற்கன ஏற்பாடுகள் பற்றி கலந்தாலோசிக்கப்பட்டதை அடுத்து உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் முன்பு ஆரம்பிக்கப்பட்டு முடிவடையாத நிலையில் உள்ள மூன்று கட்டடங்களைக் கட்டி முடிப்பதுக்கு அடுத்த வருடத்துக்கான நிதி ஒதுக்கீட்டில் முன்னுரிமையளிக்கப்படும் என்று ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரால் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் பாடசாலைகளில் உள்ள பழுதடைந்த கணனிகளின் விவரங்கள் பற்றி வலயக் கல்விப் பணிப்பாளர்கள் தெரிவித்தால் அவற்றின் திருத்த வேலைகளுக்கு ஏற்பாடு செய்ய முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டதுடன் இது தொடர்பான அடுத்த சந்திப்பு விரைவில் நடைபெறும் போது இன்றைய கலந்துரையாடலின் பிரச்சினைகள் தொடர்ந்து ஆராயப்படும் எனவும் குழுவினரால் தெரிவிக்கப்பட்டது. (இ-10-9-173)

## மோட்டார் சைக்கிள் திருட்டு

அச்சுவேலி,ஓக.19

அச்சுவேலி உலவிற்குளம் சித்தி விநாயகர் ஆலயத் தேர்த் திருவிழாவின் போது ஆலயப் பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று களவாடப்பட்டது.

பலநோக்கு கூட்டுறவுச்சங்க முகாமையாளரான மோட்டார் சைக்கிள் உரியையாளர் ஆலய வீதியில் நிறுத்திவிட்டு ஆலய தரிசனம் முடித்து விட்டு வந்து பார்த்தபோது மோட்டார் சைக்கிள் திருடப்பட்டதை அறிந்து கொண்டார்.

இது பற்றி அச்சுவேலிப் பொலீஸில் புகார் செய்யப்பட்டுள்ளது. (ஜ-11)

## தென்மராட்சி அபிவிருத்திக்கான நிதி வேறு பிரதேசங்களுக்கு!

தென்மராட்சி,ஓக.19

தென்மராட்சி, பளை ஆகிய பிரதேசங்களில் இந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட விருந்த அபிவிருத்தி வேலைகளுக்கு ஒதுக்கப்பட்ட இரண்டு கோடி ரூபா நிதி இப்பிரதேசங்களில் திட்டங்களைச செயற்படுத்த முடியாத நிலை ஏற்பட்டிருப்பதால் வேறு பிரதேசங்களுக்கு மாற்றப்பட்டுள்ளது.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதி, வடமாகாண மீள் குடியமர்வு புனரமைப்பு அதிகார சபை ஆகியவற்றின் மூலம் மேற்கொள்ளப்பட விருந்த வேலைத்திட்டங்களுக்கான நிதி என்பனவே தற்போது இப்பிரதேசங்களில் நிலவும் சூழ்நிலை காரணமாக வருட இறுதிக்குள் இந்த அபிவிருத்தி வேலைத் திட்டங்களைச் செயல்படுத்த முடியாததால் மாற்றப்பட்வுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ள ஒரு கோடி 50 இலட்சம் ரூபாவும், பளைப் பிரதேசத்தில் அபிவிருத்தி வேலைகளுக்கு 50 இலட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சியில் 13 பாடசாலைகளிலும் பளைப் பிரதேசத்தில் 3 பாடசாலைகளிலும் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளவும் தென்மராட்சி கல்வி வலயத்திலுள்ள 31 பாடசாலைகளுக்கு கணனி இயந்திரங்கள் மின்பிறப்பாக்கிகள் வழங்கவும், நான்கு பாடசாலைகளுக்கு பாண்ட்வாத்தியக் கருவிகள் வழங்கவும் நிதி ஒதுக்கப்பட்டது.

இவற்றுடன் இப் பிரதேசங்களில் சனசமூக நிலையங்கள், பாலர் பாடசாலைகள், அறநெறிப் பாடசாலைகள் ஆகியவற்றின் புனரமைப்பு மற்றும் பளைவைத்தியசாலை, பளை இரட்டைக்கேணி அம்பாள் ஆலயப் புனரமைப்பு ஆகிய அபிவிருத்தி வேலைகளுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஜ-117)

## சந்திரிகாவின் தலைமையே அரசின் உறுதிக்கு காரணம்

### றிச்சாட் பத்திரன கூறுகிறார்

கொழும்பு ஓக.19

கூட்டணி அரசுகள் தமது ஆட்சிக்காலம் முடியும் தறுவாயில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்குவது வழமை. ஆனால் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு அவ்வாறு பிரச்சினைகளை எதிர்நோக்காமைக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் சிறந்த தலைமைத்துவமே காரணமாகும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் கல்வி உயர் கல்வி அமைச்சர் றிச்சட் பத்திரன.

அரசாங்க ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியர்களுக்கான அதிகரித்த சம்பளக் கொடுப்பனவை வழங்குதற்கான குறைநிரப்புப் பிரேரணை தொடர்பான விவாதம் நாடாளுமன்றத்தில் கடந்த புதனன்று நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த போது நாடாளுமன்றத்தில் ஒரே ஒரு பெரும்பான்மை வாக்கையே பெற்றிருந்தது. இதனால் எமது கூட்டணி அரசாங்கம் கட்டாயம் பதவி கவிழும் என எல்லோரும் எதிர்பார்த்தனர். ஆனால் அவ்வாறு எதுவும் நடக்கவில்லை என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஜ-7)

**உதயவாக்கு**

அறத்தினால் பெறுவது தான் இன்பம். பிற அனைத்தும் துன்பம் தருவனவாம்.

- *திருவள்ளுவர்*

**நாளை**

ஆவணி 4

ஞாயிற்றுக்கிழமை

*திதி:* பஞ்சமி

நண்பகல் 12.52 வரை.

*நட்சத்திரம்:* ரேவதி


காலை 6.53 வரை.

*சுபநேரம்:* 9.05 - 10.35

*ராகுகாலம்:* 4.35 - 6.05

(இவை பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## நல்லூர் உற்சவ காலச் சிறப்பம்சம்



### அண்ணலே அருளுக!

மண்ணை வெறுத்த(து) ஆமோ!
மானமேபோன(து) ஆமோ!
கண்ணெனும் தமிழும் எம்மைக்
கைவிடத் துணிந்த(து) ஆமோ!
என்னமோ! ஏதோ! எப்போ
இன்னலும் செய்தோம் நாமோ!
அண்ணலே அனைத்தும் தீர்த்து
அருளுவீர்! நல்லூர்(க்) கந்தா!

- *முருகனடியான்*

### சேவடி சரணடைந்தோம்

நல்லைநகர் வீற்றிருக்கும் வேலையா - நாளும்
நல்லருளைத் தந்திடுவாய் நீஐயா
எல்லைதனில் நிம்மதியை முருகையா - நமக்கு
என்றுதான் தந்திடுவாய் கூறையா!

கல்லாமோ உந்தன் மனம் கந்தையா - கொடும்
ஷெல்லாலே சீரழிந்தோம் பாரையா
எல்லாளன் பரம்பரைதான் நாமையா - எனினும்
எத்தனைநாள் தாங்குவது சொல்லையா?

காவடிகள் எடுத்துவந்தோம் கந்தையா - உம்மைக்
காலமெல்லாம் நாம் மறவோம் குமரையா
சேவடிகள் சரணடைந்தோம் சின்னையா - என்றும்
செந்தமிழர் துணைவன்நீ தானையா.

- *"சனா"*
சித்தன்கேணி

### வாழ்வழி செய்திடுவோம்!

அலங்காரா முருகனென்று அடியாரெல்லாம் போற்றிசெய
தலங்கரக்கும் நினைவுடனே தனிவேலைத் தரித்தோனே
வலம்வந்து அனுதினமும் வந்தனைகள் செய்கின்றோம்
கலங்காத உள்ளம்தந்தே காத்திடுவாய் கனிவுடனே.

நல்லையிலே தலம் கொண்டு நன்மைபல புரிபவனே
தொல்லையெல்லாந் தீர்த்தெமது துன்பந் துடைத்திடுவாய்
வல்லமையை எமக்கீந்து வாழ்வழி செய்திடுவாய்
கல்லொத்த மனமுருகிக் கந்தாவுனை வேண்டுகிறோம்.

- *வண்ணை வசீகரன்*

### அபயம் தாருமையா!

பொழுதுக்குத் துணை கந்தா சுகந்தரும் உன்நாமம் ஐயா!
வழிக்குத் துணை வேலவா உந்தன் வடிவேல் ஐயா!
விடிவுக்குத் துணை குமரா உந்தன் திருவடியே
ஐயா ஆறுமுகா! அபயம் தாருமையா சண்முகா!

- *க.கார்த்திகா*
கந்தரோடை

### தொல்லை தவிர்ப்பாய்!

நல்லைக்குமரா எமக்கு
தொல்லை தவிர்ப்பாய்!
செல்வக்குமரா எமக்கு
துன்பம் தவிர்ப்பாய்!
முத்துக்குமரா எமது
கண்ணீர்துடைப்பாய்!
சக்திக்குமரா எமக்கு
சஞ்சலம் தவிர்ப்பாய்!
திருக்குமரா எமக்கு
வழிக்குத் துணை நீவா!

- *இளம்பரிதி*

# இந்த வார இராசி பலன்

## 19-08-2000 இலிருந்து 25-08-2000 வரை

"நல்லை நகர் முருகன் தேர் அடியில் சித்து
வல்ல வினைபோக வில்வமர முனியை
நல்ல மனம் கொண்டு உருகி நின்று வேண்ட
தொல்லை பலதீரும் எனக் கண்டு தேறு"

| | | | |
|---|---|---|---|
| சந். | | வி சனி | ரா |
| | இராசிச்சக்கரம் | | செ |
| | | | சூ புத. வெ |
| கே | | | |

*மாற்றம்:19-08-2000 இல் உத்திரட்டாதி 4 ஆம் பாதம் - சந்திரன் மீன இராசியில் நிற்கும்.*

*அரசியலில் மனமாற்றம், கொள்கை மாற்றம், ஆட்சிமாற்றம் என எதுவும் நடக்கலாம். ஆட்டுவிப்போரின் கொள்கைக்கு ஆடுவோனின் அசைவு இருந்தால் போதும். இக்காலம் இனப்பிரச்சினை விஷயத்தில் அசைவுகள் ஏற்படும். கடலுக்குள் சென்றவனின் உயிர் கடலுக்கு வெளியில் கயிறு வைத்து இழுப்பவனில் தங்கியுள்ளது. திடீர் மனமாற்றங்கள், இடமாற்றங்கள் மக்களுக்கு ஏற்படலாம். சத்தங்கள் கேட்டாலும் புதிய பாணியில் பேச்சுக்கள், அழுத்தங்கள் ஏற்படும். உலகநாடுகளின் மனமாற்றம் பல மாற்றங்களைக் கொடுக்கலாம். இந்தியாவிற்கு புதிய உதவிகள் மேற்கு நாடுகள் கொடுக்கும். உலகெங்கும் இயற்கையின் சீற்றம் வெள்ளம், காற்று ரூபங்களில் அழிவைக் கொடுக்கும் எனக் கிரகநிலைகள் காட்டுகின்றன.*

### மேடம்

சிலரது மனங்கள் சரியில்லை. அவர்களை திருப்திப்படுத்தவோ, திருத்தவோ எக்காலத்திலும் எவராலும் முடியாது. பொருள் நிலையில் போராட்டம் இருக்க இடம் உண்டு. தொழில் ஸ்தானத்தில் ஒற்றுமையில்லாத மனப்போக்குடன் பலர் பழக இடமுண்டு. நண்பர்கள் பல உதவிகள் செய்து தருவார்கள். எச் செயற்பாட்டிலும் விடாமுயற்சி மேலிடும் எண்ணங்கள் ஏற்படும். உங்கள் இடங்களில் சிலர் அத்துமீறிச் செயற்பட எத்தனிப்பதனால் போராட்ட உணர்வுகள் தலைதூக்கும். கண்நோ, நாரிநோ, வயிற்றுவருத்தங்களால் வருந்த நேரிடும். கோவில் வேலைகள், அரசியல்துறை, வியாபாரத்துறை, ஆசிரியத்துறை போன்ற துறையினர்களுக்கு மாற்றங்களும், நன்மைகளும் ஏற்படும். நாலு பேருக்கு தெரிந்த மனிதர்களாக வாழ ஆசைப்படுவீர்கள்.

*அதிர்ஷ்டநாள்:- சனி, ஞாயிறு, திங்கள்.*

## சோதிட சஞ்சீவி

### இடபம்

ஒவ்வொருவரும் தமது கடமை, தொழிலில் நிதானமாக இருத்தல் வேண்டும். அல்லது அவர்களின் பெயர்கெட்டு நன்மதிப்பு தொழில் ரீதியில் இழந்து காலகதியில் வருமானத்தை இழந்து விடுவார்கள். காலதாமதமானாலும் கருத்தாழம் மிக்க நீங்கள் அமைதியாக - உறுதியாக - பலருக்கும் உதவிகளைச் செய்து வருவீர்கள். எதிர்பாலாருடன் நிதானமாக நடந்து கொள்ளுங்கள். தொண்டையில் என்ன வருத்தம்? நெஞ்சுப் புகைச்சல், சலவருத்தம், நரம்புச் சோர்வு, வாய்வுத் தொல்லைகள் என்பன வரலாம். இயந்திரத் துறை, ஒட்டுவேலைகள், வியாபாரத் துறை, இரும்புத்துறை, நகைத் துறை, குருத்துறை சம்பந்தப்பட்டவர்கள் பல இலாபங்களை அடைவார்கள்.

பரணி எங்கும் தன் ஆதிக்கத்தைச் செலுத்தி வாழும் பலன்கள் உண்டு.

*அதிர்ஷ்டநாள்:- சனி, ஞாயிறு.*

### மிதுனம்

சத்தங்களால் மனித மனம் சலித்து விட்டது. விதிவிட்ட வழியே செல்வோம் எனச் சிந்திக்கின்றார்கள் அநேக மக்கள். எதையும் பெரிதாக எடுக்காமல் அங்குமிங்கும் தொழில் விஷயமாக ஓடியாடித் திரிவீர்கள். உங்கள் முயற்சிகளைக் கண்டு எல்லோரும் அடிக்கடி ஆச்சரியப்படுவார்கள். பொருள் நிலையில் போராட வேண்டிவரலாம். அரசியல், அரச அதிகாரிகளால் நன்மைகள் கிடைக்கும்.. எதிர்பாலார்களின் புறுபுறுப்பு இருக்கும். இடமாற்றங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். விபத்து, உரசல்காயங்கள், கைகால் வாத உளைவுகள் வர இடம் உண்டு. பத்திரிகைத்துறை, ஆசிரியத்துறை போன்ற துறையினர்களுக்கு முன்னேற்றம் ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்:- சனி, ஞாயிறு.*

### கடகம்

தமது அலுவல்கள் முடியும் மட்டும் ஐயா, அம்மா என்பார்கள்.

## மகாதேவா ஜோதிடம்

முடிந்தபின்பு அவரைத் தெரியாதா? அவருக்குக் கெட்டித்தனமில்லை. என ஏளனம் செய்யும் பலரால் துன்ப நிலை பெருகாமல் இருக்க முடியாது. தொழில்ஸ்தானத்தில் போட்டிகள் சர்வசாதாரணமாகும் அழுகுக்காக அதிகநேரம் செலவு செய்வீர்கள். குடும்பத்தில் அக்கறைகொண்டு பலதை எண்ணி அலைவீர்கள். பொருள் நிலையில் ஊக்கத்துடன் செயற்படுவீர்கள். வாகனசுகம் உண்டு. அரச அதிகாரிகள் உதவிகள் கிடைக்கும். சிலருக்கு பொருள்கள், உடைமைகள் களவுபோகலாம். வயிற்றுவருத்தம், இரத்தநோய், நெஞ்சழுத்தம் வாய்வுத்தொல்லைகள் என்பன வருத்தலாம். கடல் தொழில், பிரயாணத்துறை, ஹோட்டல்துறை, குருத்துறை போன்ற துறையில் தொடர்புடையவர்களுக்கு புதிய இலாபங்கள் கிடைக்கும்.

*அதிர்ஷ்டநாள்:- சனி,ஞாயிறு.*

### சிங்கம்

காகித ஓடம் கடல் அலைமீது போவது போன்ற வாழ்க்கையையே யுத்தத்தில் மக்கள் அனுபவிக்கிறார்கள். ஆனால் சிலர் ஒட்டகம் நுழைந்த மாதிரி நுழைந்து எமது உரிமைகளையே பறித்து இடங்களை நியாயமற்று அசிங்கப்படுத்தும் பொழுது எப்படிச் சும்மா இருப்பது. இவ்வாறு உங்களுக்கு தொழில் ஸ்தானத்தில் தொல்லைகள் பல கொடுத்தவர்களுக்கு இறைவன் தண்டனைகளைக் கொடுப்பான். தெய்வத்தொண்டு, இறைவணக்கம் உள்ளவர்களுக்கு என்றும் தீமைகளைப் பிறர் செய்தால் அவர்களுக்கே துன்பம் கொடுக்கும். எதற்கும் அமைதியாக இறைவனிடம் பாரத்தைக் கொடுத்து நல்லதைச் செய்தபடி இருப்பீர்கள். பலவீனம், நாரிநோ, வாய்வுத்தொல்லை என்பன கொடுக்கும். இயந்திரம் அல்லது உலோகத்தொடர்பானதுறை, பிரயாணத்துறை, செய்தித்துறை, ஆசிரியத்துறை, மருந்துத்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்:- சனி.*

### கன்னி

எந்தச் செல்லுக்கும் நான் அசையவில்லை. எனது ஊர்சனமெல்லாம் ஓடிவிட்டார்கள். நான் மட்டும் இங்கிருந்தேன். இப்பொழுது வருகிறார்கள் என எவரும் வீரம் விட முடியாது. எந்த நேரமும் ஓடும் சூழ்நிலை எவருக்கும் வரலாம். தொழிலில் ஓடிஓடி உழைப்பீர்கள், எல்லோருக்கும் மன மகிழ்ச்சியுடன் உதவிகள் செய்வீர்கள். எதிர்பாலார் உதவுவர். இடமாற்றங்கள் சகஜம். வயிற்றுவருத்தம், மூலச்சூடு, கைகால் சோர்வு, தலைஅம்மல், வாய்வுத்தொல்லை என்பன கொடுக்கலாம். குருத்துறை, விவசாயத்துறை, சந்தை வியாபாரத் துறை, போக்குவரத்து, எண்ணெய்த் துறையினர்களுக்கு நற்பலன்கள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்:- சனி.*

### துலாம்

நல்லவர்கள் மீது பொறாமையால் சிலர் தொழில்ஸ்தானங்களில் வீண்பழி சுமத்தி மனம் நோகச் செய்கிறார்கள். இவர்கள் தங்களுக்கு நியாயமற்ற செல்வாக்குத் தேடுகிறார்கள் எனச் சிந்திக்கிறீர்களா? சமநீதி, சிந்தனை கொண்ட உங்களுக்கு இது புரியாததல்ல. தொழில் ஸ்தானத்தில் சில பிரச்சினைகள் ஏற்படலாம். குடும்பத்தினர்களுக்காக ஓடிஓடி காரியங்கள் செய்வதனால் அடிக்கடி களைப்பு அடைந்துவிடுவீர்கள். நரம்புச்சோர்வு, பித்தமயக்கம், ஈரல், குடல்வருத்தங்கள் ஏற்படலாம். ஆராய்ச்சித்துறை, குருத்துறை, எழுத்துத்துறை, விவசாயத்துறை போன்ற துறையினர்களுக்கு நல்ல பல முன்னேற்றங்கள் ஏற்பட இடமுண்டு.

*அதிர்ஷ்டநாள்:- சனி, திங்கள்.*

### விருச்சிகம்

அரசியல்வாதிகள், தீவிரவாதிகள் லஞ்சம், ஊழல், பொய்ச்சாட்சி எனச் செயற்பட்டு மக்களுக்கு பல துன்பங்களைச் செய்கிறார்கள். ஆனால் மக்கள் அவர்களுக்கே வோட்டுப்போட்டு பயந்து நடக்கிறார்கள். இது ஏன்? இதுதான் அரசியல் சூத்திரம் என நீங்கள் சொல்வீர்கள். கலகலப்பான காலமாகும். புதிய பொறுப்புக்கள் உங்களுக்குத் தேடி வரும். அயலவர்களில் ஒரு கண்ணாக இருங்கள். பொருள்கள் தவற இடமுண்டு. எதிர்பாலார் நன்மை செய்வார்கள். பொருள் வரவுகள் தொழில் ஸ்தானத்தில் ஏற்பட இடமுண்டு. வாகனசுகம்தேடி வரும், களைப்பு, நெஞ்சுப்படபடப்பு, நாரிவலி, சலவருத்தம் என்பன கொடுக்கலாம். ஹோட்டல்துறை, கமிஷன் துறை, எண்ணெய்த்துறை, கலைத் துறை, வியாபாரத்துறை போன்ற துறையினர்கள் அதிக நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்:- திங்கள்.*

### தனுசு

ஒருவர் தேவை என நடந்தால் - மற்றவர் வேண்டாம் எனச் சொல்ல மாட்டார். ஆனால் இதை மீறி தேடித் திரிந்து பழைய வஞ்சனைகளைத் தீர்க்க முற்படுவது இளம் தலைமுறையினர்களுக்கோ, படித்தவர்களுக்கோ நல்லதல்ல. இதனால் சமுதாயத்தில் பல பிரச்சினைகள், மனக் குமுறல்கள் ஏற்படுகின்றன. இப்படிப் பட்ட அனுபவங்கள் தொழில் ஸ்தானத்தில் உங்களுக்கு வர இடமுண்டு. பொறுமையைக் கடைப்பிடியுங்கள். இடுப்புவலி, கைகால் உளைவு, எலும்பில் அடிபடல், வயிற்றுநோ, வாய்வுத்தொல்லை என்பன ஏற்பட இடமுண்டு. பாதுகாப்புத்துறை, இரசாயனத்துறை, பிரயாணத்துறை, செய்தித்துறை போன்ற துறையினர்கள் நன்மை, லாபம் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள் :- ஞாயிறு, திங்கள்.*

### மகரம்

விடிந்ததும் ஒரு எண்ணம்; இருண்டதும் பல சிந்தனை. காலையில் சூரியன் மாலையில் சந்திரன் இதுதான் மனித வாழ்வின் சக்கர சிந்தனையாகும். தொழில் ஸ்தானத்தில் விசாரணைகள், போராட்ட உணர்வுகள் ஏற்பட இடமுண்டு. பிறருக்காகச் சென்று வீண்பழி சுமக்க வேண்டிவரலாம். சளி, மனச்சோர்வு, பயம், பதற்றநிலைஏற்படலாம். போக்குவரத்துத்துறை கலைத்துறை, புடைவை, ஹோட்டல், செய்தித் துறை, குருத்துறை போன்றவற்றில் தொடர்பானவர்களுக்கு நல்ல மாற்றங்கள் ஏற்பட இடமுண்டு. இடமாற்றங்களாலும், தூரத்துச் செய்திகளாலும் நன்மைகள் ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்:- ஞாயிறு, திங்கள்*

### கும்பம்

இப்பொழுதெல்லாம் கப்பம் கேட்பவர்களும மற்றவர்களின் பொருளை கேட்காமல் எடுப்பவர்களும்தான் அதிகம். தொழில் இடங்களில் பொருள் இழப்புகள், வீண்பழி கேட்க நேரிடலாம். எதிர்பாலாருடன் நிதானமாக இருக்கவேண்டும். குடும்பத்தவர்களின் முன்னேற்றத்திற்காக ஓடியாடி திரிவார்கள். தூர தேசத்திலிருந்து உறவினர்களின் உதவிகள் அல்லது நற்செய்திகள் மனஆறுதலைக் கொடுக்கும். தோல் வருத்தம், நரம்புச் சோர்வு, படபடப்பு, உஷ்ணபீடைகள் கொடுக்கலாம். எண்ணெய் வியாபாரத்துறை, விவசாயத்துறை, சட்டத்துறை, பாதுகாப்புத் துறை, அரசியல்துறை போன்ற துறையினர்களுக்கு நல்ல மாற்றங்கள், முன்னேற்றங்கள் ஏற்பட இடமுண்டு. சதயத்தில் பிறந்தவர்கள் சகத்தையும் ஆளுவார்கள்.

*அதிர்ஷ்டநாள்:- சனி, ஞாயிறு, திங்கள்.*

### மீனம்

நீதியைப்பற்றி லண்டனில் இருந்து பேசலாம். இங்கிருந்து பேச முடியுமா? ஈராக்கிற்கு குண்டு வீசி ஆயிரக்கணக்கானவர்களை கொன்று விட்டு அமெரிக்கா தர்மத்தைப் பற்றிப் பேசலாம். எங்களால் கண்டபடி பேசவோ, சொல்லவோ முடியாத காலம். இதைப்போல தொழில் ஸ்தானத்தில் மேலிடம் செலுத்தும் கண்டிப்புக்கு நீதி,தர்மம் கேட்டால் நிச்சயம் நீங்கள் வெளியில் வரவேண்டி ஏற்படும். எனவே புத்திசாதுரியமாக நடந்து கொள்ளுங்கள்.

சளித் தொல்லை, வாய்வுத் தொல்லை, பாதத்தில் வருத்தம் என்பன வரும். வியாபாரத்துறை, கடல்வேலைகள், ஹோட்டல், வாகனத்தொடர்பான வேலைகள் செய்பவர்களுக்கு நற்பலன்கள் அதிகரிக்கும். எதிர்பாலாரின் ஆதரவு நன்மை தரும்.

*அதிர்ஷ்டநாள்:- சனி,ஞாயிறு, திங்கள்.*

★

---

**இடம்பெயர்ந்த மக்கள்**

# அருகில் உள்ள கிளைகளில் நிவாரணம் பெற ஏற்பாடு

மூளாய்,ஓக.19

அண்மையில் இடம்பெயர்ந்த மக்களுக்கான நிவாரண விநியோகத்தை அவர்கள் தங்கியிருக்கும் பகுதிக்கு அண்மையில் உள்ள கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வலிகாமம் மேற்கு மற்றும் வலிகாமம் தென்மேற்கு ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த சில மாதங்களுக்குரிய விநியோகங்களின் போது பொது மக்கள் பலர் நீண்ட தூரம் சென்றே கிளைகளில தமது நிவாரண விநியோகத்தைப் பெற வேண்டியிருந்தது. இவ்வாறான சிரமங்களைத தவிர்ப்பதற்காகவே இம்முறை இந்தப் புதிய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-99)

# கந்தரோடைக்கு வழங்கப்படும் நீர் துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது

## பிரதேச சபைத் தலைவர் கவலை

வலிகாமம தெற்கு,ஓக.19

'கந்தரோடைக் கிராம மக்களுக்கு எவ்வளவோ கஷ்டங்களுக்கு மத்தியில் வழங்கப்பட்டு வரும் குடிதண்ணீரை சிலர் துஷ்பிரயோகம் செய்து வருகின்றனர். நீர்க் குழாய்களில் இருந்து 'ஹோஸ் பைப்பு'கள் மூலம் தமது வீட்டுப் பூக்கன்றுகளுக்கு நீர் பாய்ச்சுகின்றனர். இது ஒரு துரோகத்தனமான செயல். இவ்வாறு நீரை தவறான வழியில் பயன்படுத்துவோரை எச்சரிக்கின்றேன். அவர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கத் தயங்கமாட்டேன்.'

இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார் வலிகாமம் தெற்கு பிரதேசச் சபைத்தலைவர் தி.மா. செல்வராசா.

கந்தரோடை ஞானவைரவர் சனசமூக நிலைய சிறுவர் பாடசாலை விளையாட்டு விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில அவர் மேற்கண்ட எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

நிலையத தலைவர் இ.முருகையா தலைமையில் நடைபெற்ற இவ் விளையாட்டு விழாவில் பிரதேச சபைத் தலைவர் மேலும் கூறியதாவது:-

கந்தரோடைக் கிராம மக்களுக்கு நல்ல குடிதண்ணீர் வழங்கக் குழாய்கள் அமைத்துக் கொடுத்தவர் சுன்னாகம் பட்டின சபையின் உறுப்பினராக இருந்த எனது தமையனார் தி.மா.நடராசா ஆவார். இராணுவ நடவடிக்கைகளால் சிதைவடைந்து போய் விட்ட குழாய்களை எமது பிரதேச சபையின் மூலம் ஜி.ரி.சற் நிறுவனம் மற்றும் தேசிய தண்ணீர் வழங்கு சபை என்பனவற்றின் உதவியோடு கந்தரோடை கிராம மக்களின் குடிதண்ணீர் வசதிக்காகப் புனரமைப்புச் செய்து குடிதண்ணீர் வழங்கி வருகின்றோம்.

மக்கள் பெறும் குடிதண்ணீருக்காக தேசியநீர் வழங்குசபை, மக்கள் வரிப்பணம் கட்டத் தவறியமைக்காக குடிநீர் வழங்கலை நிறுத்தப் போவதாக எச்சரித்த தருணத்தில் எமது பிரதேசசபை தலையிட்டு, குடிதண்ணீரை தொடர்ச்சியாகப் பெற வழி செய்திருந்தது.

தற்போது இடம்பெயர்ந்திருந்த மக்கள் பலர் கந்தரோடை நலன்புரி நிலையங்களிலும், இனத்தவர்களின் வீடுகளிலும் தங்கியுள்ளனர். இவர்களுக்கு குடிதண்ணீர் அவசியமானது.

இ.முருகையா தனது தலைமையுரையில் கூறியதாவது:-

சனசமூக நிலையங்களின் செயற்பாடுகள்யாவும் அக்கிராம மக்களின் நன்மைகளுக்காகவே செய்யப்படுகின்றன. எமது கிராமத்து மக்கள் எமது கிராமத்தையும் மண்ணையும் நேசிக்க வேண்டும். எமது மக்களின் செயற்பாடுகளில் நம்பிக்கை வைக்க வேண்டும். எமது கிராமத்திலேயே பாலர் பாடசாலை இருக்க அயலூர் பாடசாலைகளில் தமது பிள்ளைகளைச் சேர்க்கும் மனப்பாங்கு மாற வேண்டும். தனிப்பட்ட கோபதாபங்களுக்காக பொதுஸ்தாபனங்களை வெறுக்கக் கூடாது எனக் கேட்டுக் கொண்டார்.

இவ்விழாவில் சுன்னாகம் ப.நோ. கூ.சங்கத் தலைவர் சி.குமாரவேல், தமிழ்க்கந்தையா வித்தியாலய அதிபர் க.செல்வக்குமாரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர் மா.பாலசுப்பிரமணியம் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டனர். (ஐ-152)

# யாழ்.சிறையில் இருந்து 14 பேர் நீதிமன்றில் ஆஜர்

யாழ்ப்பாணம்,ஓக.19

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் படையினரால் கைது செய்யப்பட்டு, யாழ்.சிறைச்சாலையில் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த கைதிகளில் 13பேர் யாழ்.நீதிவான் நீதிமன்றில் கடந்த புதனன்று ஆஜர் செய்யப்பட்டனர்.

நித்தியானந்தன் மயூரன், கனகசபை இராசலிங்கம், சிதம்பரேஸ்வரர் யோகநாதன், வைரமுத்து சிவநேசநாதன், சிவகணேசநாதன் சரோஜினி, தர்மலிங்கம் விஜயகுமார், தம்பு தம்பிராசா, நடராசா ரஞ்சித்காந்தன், நவரத்தினம் ஆனந்தராசா, சூசைப்பிள்ளை பரமேஸ்வரன், தங்கராசா ரதீபன், கந்தகுட்டி உதயராசா, இராசையா தங்கராசா, இரத்தினசிங்கம் ரமேஸ் ஆகியோரே ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்களில் 8பேரின் வழக்குகள் மீதான விசாரணைகள் எதிர்வரும் 21ஆம் திகதிக்கும், ஏனையோரின் வழக்குகள் எதிர்வரும் 28ஆம் திகதிக்கும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும்-

அதுவரை இவர்கள் அனைவரையும் யாழ்.சிறைச்சாலையில் விளக்க மறியலில் வைக்குமாறும் -

யாழ்.பதில் நீதிவான் பா.சுப்பிரமணியம் உத்தரவிட்டார்.

(ஐ-9)

# கூட்டங்களை ஒழுங்காக நடத்தாத பிரதேச சபைகள் மீது நடவடிக்கை

## உள்ளூராட்சி ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக.19

கூட்டங்கள் எதனையும் கூட்டாமல் இருக்கும் பிரதேச சபைகள் மீது ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இவ்வாறு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் கே.சபாபதிப்பிள்ளை தெரிவித்தார்.

யாழ்.நகரிலுள்ள ஈ.பி.டி.பி. தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வி.தவராசா எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையிலே அவர் இவ்வாறு கூறினார்.

சாவகச்சேரி நகரசபை இரண்டு வருடங்களாக கூட்டப்படாமல் இருந்தது. இதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா?என்று அவர் கேள்வி எழுப்பினார்.

உள்ளூராட்சி ஆணையாளர் இது தொடர்பாக விளக்கமளிக்கையில் கூறப்படுவதாவது:-

பிரதேச சபைகள், நகரசபைகள், மாநகரசபைகளைப் பொறுத்தவரை மாதம் தோறும் அதன் கூட்டங்கள் கூட்டப்பட வேண்டும்.

யாழ்.குடாநாட்டில் நிலவும் தற்போதைய சூழ்நிலையினால் சபைகள் இவ்வாறு செயற்பட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகரசபையைப் பொறுத்தவரையும் ஒவ்வொரு முறையும் புதிய புதிய நிலைமைகள் ஏற்பட்டு வருகின்றன.

உள்ளூராட்சி சபைகளில் பல வெற்றிடங்கள் இருக்கின்றன. படிப்படியாக இந்த வெற்றிடங்கள் நிரப்பப்படும் - இப்படி அவர் கூறினார்.

### யாழ்.மாநகரசபை விடயம்

யாழ்.மாநகர சபை ஆணையாளர் வே.பொ.பாலசிங்கம் அங்கு சபையின் செயற்பாடுகள் தொடர்பாக விளக்கமளிக்கையில் கூறியதாவது:-

யாழ்.மாநகர சபையின் கூட்டத்தைக் கூட்டுமாறு உறுப்பினர்கள் வலியுறுத்தி வருகின்றனர். மாநகர பதில் மேயரின்பணிப்புக்கு இணங்க அடுத்தவாரம் மாநகர சபைக் கூட்டம் நடத்தப்படும்.

யாழ்.மாநகர சபைப்பகுதியில் நிலத்தின் கீழுள்ள நீர் அழுக்கடைந்து வருவதால் நீண்டகால அடிப்படையில் கழிவகற்றும் திட்டம் ஒன்றினை நடைமுறைப்படுத்த வேண்டும் - என்று தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட விவசாய நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தலைவர் சி.வீ.கே. சிவஞானம், கப்பலில் பொருள்கள் கொண்டுவந்து பாதிக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசாங்கத்திடமிருந்து நஷ்டஈடு பெற்று வழங்கப்பட வேண்டும் என்று யாழ்.நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது:-

கூட்டுறவு சமாசத்திற்கு என வாடகைக்கு அமர்த்தப்பட்ட 'உகன' கப்பல் கொழும்பிலிருந்து பொருள்களை ஏற்றிவரும் பொழுது கடலில் மூழ்கடிக்கப்பட்டதனால் ஒரு கோடியே 85 லட்சம் ரூபா நஷ்டமேற்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்திலுள்ள ப.நோ.கூ.சங்கங்கள் வட்டிக்கு கடன் எடுத்தே தமது வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. எனவே இதற்குரிய நிவாரணத்தைப் பெற்றுத் தருமாறு கோருகின்றேன்.

இங்குள்ள 13 சங்கங்களுக்கும் கடன் அடிப்படையில் லொறிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்தக் கடனை மீளளிப்புச் செய்வதற்கு பெரும் சிரமப்பட வேண்டியுள்ளது. எனவே இந்த லொறிகளுக்கான கடனை அன்பளிப்பாகக் கணிக்க நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகின்றேன்.

கொழும்பிலிருந்து கப்பலில் கொண்டுவரும் பொருள்களுக்கு ஜி.எஸ்.ரி. வரி அறவிடப்படுவதினால் பொருள்களில் ஒவ்வொரு கிலோவுக்கும் 6முதல் 7ரூபா மேலதிகமாக செலுத்த வேண்டியுள்ளது. எனவே இந்த வரி நீக்கப்பட வேண்டும்.

இப்படி அவர் மேலும் கேட்டுக் கொண்டார்.

(ஐ-5)

# ரணிலுக்கு களங்கம் ஏற்படுத்தவே டக்ளஸ் பீரிஸ் நாட்டுக்குள் அனுமதி

## ஐ.தே.க. குற்றச்சாட்டு

கொழும்பு,ஒக.19

ஐக்கிய தேசியக் கட்சிக்கும் அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சேறு பூசி களங்கம் ஏற்படுத்துவதற்காகவே அரசாங்கம் வெளிநாட்டிலிருந்து டக்ளஸ் பீரிஸை கொழும்புக்கு அழைத்து வந்துள்ளது.

கடந்த செவ்வாய் நாடாளுமன்றக் கட்டடத்தில் நடைபெற்ற ஐ.தே.க. நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் இவ்வாறு குற்றச்சாட்டுத் தெரிவிக்கப்பட்டது.

ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் டக்ளஸ் பீரிஸ் விவகாரமே விரிவாக ஆராயப்பட்டது.

இது தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் விக்கிரமசிங்க விளக்கம் அளிக்கையில் கூறியதாவது:-

ஜுலை மாத இறுதியில் சென்னையில் உள்ள இலங்கை பிரதித் தூதரகத்துக்குச் சென்ற இரகசியப் பொலிஸ் பிரிவின் பணிப்பாளர் கஜநாயக்கா அங்கு டக்ளஸ் பீரிஸுடன் ஆலோசனை நடத்தியதன் பின்னர் அவருக்கு இலங்கை வருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஒகஸ்ட் மாதம் 3ஆம் திகதி டக்ளஸ் பீரிஸ் ஏயர் லங்கா விமானம் மூலம் கொழும்பு வந்தார். அவருடன் இரகசியப் பொலிஸ் பிரிவின் பொலிஸ் அதிகாரி லிண்டனும் அதே விமானத்தில் வந்துள்ளார்.

விமான நிலையத்தில் வைத்து போலிக் கடவுச்சீட்டின் மூலமே இங்கு வந்துள்ளார் எனக் காரணம் காட்டி டக்ளஸ் பீரிஸ் விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார். இரகசியப் பொலிஸாரின் ஒத்துழைப்புடனேயே போலிக் கடவுச்சீட்டுடன் டக்ளஸ் பீரிஸ் இங்கு வந்தார் என்பது இந்த நடவடிக்கைகள் தெளிவாகக் காண்பிக்கின்றன. இத்தகைய பின்னணியில் போலிக் கடவுச்சீட்டுத் தொடர்பாக மற்றவர்கள் மீது குற்றம் சுமத்துவதில் அடிப்படைக்க காரணிகள் எதுவும் கிடையாது.

இரகசியப் பொலிஸ் பிரதிப் பொலிஸ் மா அதிபர் புண்ணியா டீ. சில்வாவினால் டக்ளஸ். பீரிஸ் சார்பில் சத்தியக் கடதாசிகள் பல தயாரிக்கப்பட்டிருப்பதாகவும் டக்ளஸ் பீரிஸ் தமது சார்பிலான சட்டத்தரணியைக் கூட இரகசியப் பொலிஸ் பிரிவினருமே தேர்ந்தெடுத்துள்ளனர் என்ற தகவலும் வெளியாகியுள்ளது.

உண்மை நிலை இவ்வாறிருக்கையில் மக்காப் பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்த மத்திய கொழும்பு ஐ.தே.க அமைப்பாளர் முஹம்மத் மஹ்ரூபின் பெயரைத் தொடர்பு படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ள சேறு பூசும் நடவடிக்கைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க மஹ்ரூப் தீர்மானித்துள்ளார் - என்றார்.

எதிர்க்கட்சித் தலைவரின் ஆலோசனையுடன் சொந்த விருப்பத்தின் பேரில் சிங்கப்பூர் சென்ற ஐக்கிய தேசியக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பில் அரசு தெரிவிக்கும் குற்றச்சாட்டுக்கள் குறித்தும் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

(ஐ-6)

# அவலப்படும் மக்களுக்கு இயன்றவரை உதவும் மனப்பக்குவம் வளர வேண்டும்

## 'நல்லைக்குமரன்' வெளியீட்டு விழாவில் சிவத்தமிழ்ச்செல்வி

அவலப்படும் மக்களுக்கு இயன்றவரை உதவி செய்யப்பழக வேண்டும். அதற்கான மனப்பக்குவத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி தெரிவித்தார்.

யாழ். மாநகர சபையின் சைவசமய விவகாரக்குழுவின் நல்லைக்குமரன் 8ஆவது மலர் வெளியீட்டு வைபவம் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற சமயம் அதில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

மாநகர ஆணையாளர் வே.பொ. பாலசிங்கம் தலைமையில் நடந்த இந்த வைபவத்தில் தங்கம்மா அப்பாக்குட்டி மேலும் கூறியதாவது:-

புனித மண் என்று போற்றப்பட்ட எமது யாழ்ப்பாணத்தில் இன்று விஷமச் செயல்கள் அதிகரித்துவிட்டன. அதிகார தோரணையில் இருப்பவர்கள் ஏழைகளைப் பற்றிச் சிந்திப்பதில்லை.. இடப்பெயர்வை அடுத்து எத்தனையோ மக்கள், குழந்தைகள் பசி பட்டினியுடன் வீதிகளில் வாழ்கிறார்கள். அவர்களுக்கு உதவவேண்டும் என்ற சிந்தனை எம்மிடையே அருகிவிட்டது. இந்த நிலையில் நாம் செய்ய வேண்டியது என்ன என்பது குறித்துச் சிந்திக்க வேண்டும். அல்லல்படும் மக்களுக்கு இயன்ற வரை உதவி செய்யப் பழக வேண்டும். அதற்கான மனப்பக்குவத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

சைவசமய விவகாரக் குழு ஆண்டுதோறும் வெளியிடும் மலர் ஞானமலர். மக்களைச் சமய நெறிகளில் ஈடுபடுத்தும் சாதனம் ஞான நூல்கள். சமயப்பிரசாரமும் அன்னதானங்களும் கூடிய அளவுக்கு பெரிய அளவில் இடம்பெற வேண்டும். அறங்காவலர்களிடம் அறச் சிந்தனைகள் மிளிரவேண்டும். அதற்கு இது போன்ற நூல்கள் தேவை - என்றார்.

யாழ் மாநகர சுகாதார வைத்திய அதிகாரி, வைத்திய கலாநிதி இ.தெய்வேந்திரன் பேசுகையில் கூறியதாவது :-

தமிழ் மக்கள் ஐம்பத்தைந்து நாடுகளில் வாழ்கிறார்கள். எனினும் யாழ்ப்பாணத்தில் தமிழ் மிகவும் உயர்ந்த நிலையில் பேணப்படுகின்றது. நீங்கள் அதைக்காப்பாற்றுவீர்கள் என்று 1974இல் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டில் கலந்து கொண்ட பிலிப்பைன்ஸ் தேசத்தை சேர்ந்த அறிஞர் கூறினார். தமிழர்கள் யார் என்பதை சைவர்களின் பண்ணிசை, பாராயணம், நாதஸ்வர வாத்திய இசைகள் புலப்படுத்துகின்றன. இன்று எமது பண்பாடுகளும் கலாசாரங்களும் அருகிக்கொண்டுவரும் வேளையில் யாழ்.மாநகரசபை சைவசமய விவகாரக்குழு அவற்றைப் பாதுகாப்பதில் அக்கறையுடன் செயற்படுகின்றது.

சில ஊடுருவல்கள் ஏற்பட்டு மதமாற்றங்கள் இடம்பெற முனைப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன. நாம் எமது பணியைப் பலப்படுத்த வேண்டும். யாழ்ப்பாணத்தின் இன்றைய நிலையில் சில செயற்பாடுகளை மேற்கொள்வது கஷ்டமாக இருப்பினும் சைவசமய விவகாரக் குழு முடிந்தவரை தனது பணியை ஒழுங்கமைத்து செயற்படுத்துவதன் மூலம் எமது சமயத்தின் வளர்ச்சிக்கு உதவுகிறது - என்றார்

### மாநகர ஆணையாளர்

யாழ். மாநகர ஆணையாளர் வே.பொ.பாலசிங்கம் தமது தலைமையுரையில் கூறியதாவது:-

இன்று ஒரு நல்ல பக்தி இலக்கியம் வெளியாகிறது. எமது வாழ்க்கை பக்திமயமாக, ஆனந்தமயமாக இது ஓர் உந்து சக்தியாகும். நல்லூர் மஹோற்சவ காலத்தில் மக்கள் மகிழ்ச்சியாகவும் ஆனந்தமயமாகவும் காணப்படுகின்றார்கள். தமது துன்பதுயரங்களுக்கு விடிவுவரும் என்ற நம்பிக்கையுடன் தெய்வ நம்பிக்கையுடன் கூடிய வாழ்வு வாழ்கிறார்கள். இன்று வெளியாகும் மலர் எமது இளம் சமுதாயத்திற்கு எமது சமயத்தின் நெறிகளையும் தத்துவங்களையும் விளக்குவதன் மூலம் ஓர் அன்பான சமுதாயம் உருவாக வழியமைக்கும். எல்லோரும் அன்பாக வாழவேண்டும் என்ற கோட்பாட்டை அது நிறைவு செய்கிறது- என்றார்.

### ஆதீன முதல்வர்

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச்சார்ய சுவாமிகள் தமது ஆசியுரையில் கூறியதாவது:-

இலங்கையின் மாநகராட்சி மன்றங்களில் தனித்துவமாக விளங்குவது யாழ்.மாநகரசபை. அது தமிழர்களுடைய கலாசாரத்தைப், பண்பாடுகளைப் பிரதிபலிக்கும் வகையில் தனது கடமைகளைச் செய்வது எம் எல்லோருக்குமே பெருமையளிக்கிறது. முருகப்பெருமானின் தத்துவங்களை எடுத்துக் காட்டும் வகையில் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழு இந்த மலரின் மூலம் சிறந்த கருத்துக்களை தந்துள்ளது. துன்பங்கள் நீங்கி மக்கள் மனநிறைவுடன் வாழ முருகப் பெருமானின் திருவருள் எல்லோருக்கும் கிடைப்பதாக- என்றார்.

மாவை ஆதீன முதல்வர் து.சு. சண்முகநாதக்குருக்கள் பேசும் போது கூறியதாவது:-

இன்று யாழ்நகரில் எமது சமயத்தின் வளர்ச்சியில் அக்கறை கொண்டுள்ளவை துர்க்காதேவி தேவஸ்தானமும்,யாழ். மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழு ஆகிய இரண்டும் மட்டுமே. இந்த இருதாபனங்களும் சமய செயற்பாடுகளில் தமது நடவடிக்கைகளை விரிவாக்கிக்கொண்டு மக்களுக்கு எது தேவையோ அதை வழங்குகின்றன.

1990இல் மாவிட்டபுரம், நகுலேஸ்வரம், திருக்கேதீச்சரம் போன்ற புண்ணிய தலங்களுக்கு மக்கள் செல்ல முடியாத நிலை இருந்த சமயம் அதனை ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவந்தது இந்த இருதாபனங்கள் மட்டுமே. பின்னால் மக்கள் இந்த இடங்களுக்குச் செல்லக் கூடியதாக அமைய இவர்களின் கோரிக்கைகளே காரணமாகும். இன்றும் இக்கடிதங்கள் ஜனாதிபதியிடம் ஆவணங்களாக உள்ளன. நீலன் திருச்செல்வம், சிவதாசன் போன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் இத்தலங்கள் பற்றி எடுத்துரைக்க இந்தக் கடிதங்களே உதவின. சைவசமய விவகாரக் குழுவினால் எமது சைவ மக்கள் பெரும் பலன்களைப் பெறுகின்றனர். அவர்களின் 8 ஆவது வெளியீடான நல்லைக் குமரன்மலர் மாணவர் சமூகத்திற்கு கிடைத்த அரிய பொக்கிஷம்- என்றார்.

நல்லைக்குமரன்மலர்- 8 ஆவது வெளியீட்டின் முதல் பிரதியை மலராசிரியரிடம் இருந்து சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பெற்றுக் கொண்டார்.

செல்வி ஸ்ரீமகள் ஸ்ரீரங்கநாதன், தேவார இசைமணி திருஞானசம்பந்தன் ஆகியோரின் பண்ணிசைகளும் இடம்பெற்றன. (ஐ-3-111)

# வலை மற்றும் வள்ளங்களை மீட்க படைத்தரப்பு அனுமதி

யாழ்ப்பாணம்,ஒக.19

குடாநாட்டில் கடல் பிரதேசத்தில் மீனவர்கள் விட்டு வந்த வலைகள் மற்றும் வள்ளங்களை மீட்க அனுமதி வழங்குவதென நேற்று முன்தினம் நடந்த சந்திப்பில் இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

யாழ். நகர கொமாண்டர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற படை அதிகாரிகளுடனான சந்திப்பிலேயே இந்த இணக்கம் காணப்பட்டது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர்களான கே.வி.குகேந்திரன், எஸ். தவராசா,என். மதனராஜன் ஆகியோரும் மீனவர் சங்கப் பிரதிநிதிகளும் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

குடாநாட்டு மீனவர்கள் கட்டுப்பாடுகள் இன்றி மீன்பிடிக்க அனுமதிக்க வேண்டும் என்று தூதுக் குழுவினர் கோரிக்கை விடுத்தனர்.

கடற்படை,விமானப்படை அதிகாரிகள் கொண்ட மாநாடு ஒன்றை நடத்தி இதற்குப் பதில் அளிப்பதாக படை அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-36)

# மீனவர் மீது தாக்குதல்: மன்னாரில் ஒருவர் பலி!

மன்னார் பேசாலை கடற்பரப்பில் கடந்த புதன்கிழமை அதிகாலை மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் மீது கடற்படையினர் நடத்திய தாக்குதலில் ஒருவர் உயிரிழந்ததுடன், ஏனைய இருவர் நீந்திக் கரை சேர்ந்துள்ளனர்.

அல்பிரட் லின்ரன் பீரிஸ் (வயது 33) என்ற 3 பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

கடற்படையினரால் மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்ட குறிப்பிட்ட பகுதிக்குள்ளே மீன்பிடித்துக் கொண்டிருந்தவர்கள் மீதே கடற்படையினர் தாக்குதல் நடத்தியதாகவும் தெரிய வருகிறது.

இதேவேளை-

இந்தச் சம்பவம் தொடர்பாக வன்னி மாவட்ட தமிழீழ விடுதலை இயக்க (ரெலோ) நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கு அவசரக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

கடற்படையினரால் அனுமதி வழங்கப்பட்ட கடற்பகுதிக்குள் மீன்பிடித்துக் கொண்டிருந்த அப்பாவி மீனவர் ஒருவர் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். அதே நேரம் பாரிய இயந்திரப்படகுகள் மூலம் மன்னார் கடற்பரப்புக்குள் இரவோடிரவாக நுழையும் இந்திய மீனவர்கள் கடற்படையின் எவ்வித தொந்தரவுமின்றி மீன்பிடித்துச் செல்கின்றனர்.

ஆனால், மன்னார் மீனவர்களோ கடற்படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் மட்டுமே மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்டு வருவதுடன் கடற்படையினரின் தாக்குதல்களுக்கும் உள்ளாக்கப்படுகின்றனர்.

எனவே, இவ்வாறான சம்பவங்கள் இனிமேல் இடம்பெறாமலிருப்பதை உறுதிப்படுத்துவதுடன் இந்திய மீனவர்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தி மன்னார் மீனவர்கள் சுதந்திரமாகக் கடற்றொழிலில் ஈடுபட அனுமதிப்பதுடன், கொல்லப்பட்ட மீனவரின் குடும்பத்திற்கு நஷ்டஈடு வழங்குமாறும் அக்கடிதத்தில் செல்வம் அடைக்கலநாதன் கோரியுள்ளார். (ஐ-6)

# ஓட்டோ சாரதி உட்பட இருவர் கைது

வவுனியா நகரசபை மண்டபத்துக்கு முன்பாக புதனன்று மாலை இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல் தொடர்பாக ஓட்டோ சாரதி உட்பட இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தற்கொலைக் குண்டுதாரி வந்ததாகக் கூறப்படும் ஓட்டோவின் சாரதியே கைதுசெய்யப்பட்டுள்ளார். குண்டுத் தாக்குதலின் போது சேதமடைந்த ஓட்டோவும் பொலிஸாரினால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. (இ)

# மேலும் 11 பேர் தமிழகம் சென்றனர்

இலங்கையிலிருந்து மேலும் 11 தமிழர்கள் அகதிகளாக இந்தியா சென்றடைந்தனர்.

புதன் மாலை தலைமன்னாரிலிருந்து படகுகளில் புறப்பட்ட இவர்கள் வியாழன் காலை இந்தியாவின் தனுஷ்கோடியை சென்றடைந்ததாக தெரிவிக்கப்பட்டது

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

ஆ. இராஜ்மோகன் என்பவரது விசேட அ.அட்டை (0901033498) 14-08-2000 அன்று நெல்லியடிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மதுவரி நிலையம், கே.கே.எஸ்.வீதி,சுன்னாகம் என்னும் முகவரியிலோ அல்லது அடையாள அட்டையில் உள்ள முகவரிக்கோ அனுப்பி வைக்கவும். (77422)

தர்மராசா கஜரூபன் என்பவரது விசேட அடையாள அட்டை (இல. 0906026466) சுதுமலை அம்மன் கோயிலுக்கும் இணுவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து லிங்கம் கொமினிக்கேசன், பரராஜசேகரப் பிள்ளையார் கோயிலடி எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (77426)

ப.அன்ரன் மரியதாஸ் என்பவரின் வியாபாரக் கணக்குகள் கொண்ட சிவப்பு நிற டயறி 12.08.2000 அன்று கஸ்தூரியார் வீதிக்கும் நாவலர் வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து இளவரசி புடைவையகம், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (77424)

கிளமற் சாள்ஸ்டிக்ஸன் என்பவரது விசேட அ.அ (இல. 0901033385) 15-08-2000 அன்று புலவர்லேன், நவாலி வடக்கு, மானிப்பாய் எனும் இடத்திற்குள் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் கள் தயவுசெய்து அன்ரன் செல்வக்குமார், புலவர்லேன், நவாலி வடக்கு, மானிப்பாய் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (77432)

## மணமக்கள் தேவை

வயது 27 தொடக்கம் 39 வரை டாக்டர், பொறியியலாளர், பட்டதாரிகளுள்ள நான்கு பெண்களுக்கும், 5ஆண்களுக்கும் மாற்றாகவோ தனியாகவோ மணமக்கள் தேவை. தகுதிக்கேற்ப சீதனம் வழங்கப்படும். முழு விவரங்கள், யாதகங்களும் உள்ளடங்கலாம் தரகர் இன்றி. தொடர்புகளுக்கு விளம்பர இல. 1081, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (77440)

## விற்பனைக்கு

மில் பாவனைக்குரிய திரீபேஸ் மோட்டார், ஸ்ராட்டர் சுவிட்ச், மெயின் சுவிட்ச் போட்டுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 70, சட்டநாதர் றோட், நல்லூர், யாழ்ப்பாணம். (77421)

கட்டில்கள், மேசைகள், கதிரைகள், அலுமாரி, கண்ணாடி மேசைகள், வீடியோ டெக் மற்றும் ஆட்டுக்கல், அம்மி, பெண்களுக்கான லுமாலா சைக்கிள் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: "பற்றிமா வாசம்", சில்லாலை, பண்டத்தரிப்பு. (77364)

## நாய்கள் விற்பனை

ஒரு **Bull dog** ஆண் நாயும் **Dashound**க்கு பிறந்த நாய்க் குட்டியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச்சந்தையடி, நல்லூர். (77410)

## மரக்கன்றுகள் விற்பனை

நல்ல இன மா, தேசி, தோடை, கமுகு, குறோட்டன், செவ்விளநி றோஸ், செவ்வரத்தை, றோஸ்பூ மற்றும் பூக்கன்றுகள் **Concrete** பூச்சாடிகள், மருந்து வகைகள் என்பன வற்றை பெற்றுக் கொள்ளலாம். தொடர்புகளுக்கு: இல.19, முருகேசர் ஒழுங்கை,(நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர். (77409)

## சோதிடம்

சாதகக்குறிப்பு பலன், திருமணப் பொருத்தம் பார்ப்பதற்கும் உள்ளூர், வெளியூர் சாதகக் குறிப்புக்கள் எழுதிக் கொள்ளவும். தொடர்பு: சிவா சோதிடர், 111, கோயில்வீதி, நல்லூர். (77355)

## தவறிவிட்டது

கைதடி தெற்கு, கைதடியைச் சேர்ந்த இராமன் கமலம் ஆகிய எனது தே.அ.அட்டை இல. (61676 1722v) கடந்த 5 ஆம் திகதி கரவெட்டி பிரதேச செயலகப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் [illegible].அரியரத்தினம் "ராஜ் பவான்", அ[illegible]ாய் தெற்கில் ஒப்படைக்கவும். (77436)

## தவறிவிட்டது

பிரதான வீதி, சுன்னாகம் எனும் முகவரியிடப்பட்ட திருமதி விக்கினேஸ்வரமூர்த்தி கமலாதேவி (ஆசிரியை) என்பவருடைய தேசிய அ.அ (இல. 568530799**V**), விசேட அ.அ. (இல. 0906022903), தொழில் அ.அட்டை மற்றும் சிறுதொகைப்பணம், அடைவு துண்டு என்பன கம்பஸ் பாக் (**Bag**)குடன் 15-08-2000 அன்று டச்சு வீதியில் தவறிவிட்டன.கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து குளுக்கண்டி ஒழுங்கை,கோப்பாய் தெற்கு, கோப்பாய் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (77437)

## மணமகள் தேவை

யாழ். கௌரவ உயர் குடும்பத்தைச் சேர்ந்த முப்பத்தைந்து வயது நிரம்பிய நற்குணமிக்க அரச உத்தியோகம் பார்க்கும் கண்பார்வையற்ற பட்டதாரி மணமகனுக்கு அடக்கமும் பண்பும் நிறையப் பெற்ற மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். அனைத்து விவரங்களுடனும் தொடர்பு கொள்க. விளம்பர இல. 1079, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (77438)

## தவறிவிட்டது

கைதடி மேற்கு, கைதடி எனும் முகவரியுடைய திருலோகசிங்கம் கௌரி என்பவருடைய தேசிய அ.அ. (இல.797563234V), விசேட அ.அ.(இல.091007290) என்பன நவாலியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மானிப்பாய் தபாற்கந்தோரில் ஒப்படைத்துதவவும். (77435)

## பொருளியல்

2000 **A/L** பரீட்சையில் 50 இற்கு கூடிய புள்ளிகளை நடைமுறை விடயங்கள் **II** நூல் பெற வைத்தது. 2001 **A/L** பிரிவுக்கு நடைபெறவுள்ள தவணைப் பரீட்சைக்கு பயனுள்ள நூலான பொதுப் பொருளாதாரம் மற்றும் பணம்,சர்வதேச வர்த்தகம், வர்த்தகமாற்றுவீதம், அபிவிருத்திக் கொள்கை, நடைமுறை விடயம் **II** போன்றன யாழ்ப்பாணம், நெல்லியடி, சுன்னாகத்தில் விற்பனையாகின்றன. ஆசிரியர்: வே.கருணாகரன். (77271)

---

உ

# பூப்புனித நீராட்டு விழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் விக்கிரம வருஷம் ஆவணித் திங்கள் 5 ஆம் நாள் (21-08-2000) திங்கட்கிழமை பூரநட்சத்திரமும் அமிர்த யோகமும் கூடிய சுப நேரத்தில் எங்கள் ஏக புத்திரி

திருநிறைச் செல்வி

**கௌதமி சின்னராசா அவர்களுக்கு**

பூப்புனித நீராட்டுவிழாவை நடத்த பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் தாங்கள் அத்தருணம் குடும்ப சகிதம் சமுகம் தந்து செல்வியை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*அச்சுவேலி வடக்கு,*
*விளங்கியவத்தை.*

தங்கள் நல்வரவை நாடும்:
**சி.குட்டியன்**

(77434)

---

உ

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

# பூப்புனித நீராட்டு விழா அழைப்பு

**அன்புடைய உறவினர், நண்பர்களுக்கு!**

நிகழும் விக்கிரம வருடம், ஆவணி மாதம் 4 ஆம் திகதி நாளை (20-08-2000) ஞாயிற்றுக்கிழமை பகல் 11.05 முதல் 11.45 மணி வரையுள்ள அமிர்த சித்த யோகம் கூடிய சுபவேளையில்

*எமது கனிஷ்ட புத்திரி*

திருநிறை செல்வி **அன்பழகி** அவர்களுக்கு

பூப்புனித நீராட்டு விழா பூநாறி ஒழுங்கை, கொக்குவில் மேற்கிலுள்ள மாமனார் திரு. தியாகராசா குருநாதன் அவர்களது இல்லத்தில் நடத்தத் திருவருள் துணைகொண்டு நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசமேதராய் சமுகந்தந்து செல்வியை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:
***திரு.திருமதி***
***கு.கருணாகரசிங்கம் நாகேஸ்வரி***

*சங்கரப்பிள்ளை வீதி,*
*ஆனைக்கோட்டை.*

(77293)

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் கணபதி கந்தையா

(சிறந்த கட்டட ஒப்பந்தகாரரும், மகாயோக மாளிகை உரிமையாளரும்)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| *06.12.1929* | *30.08.1999* |

திதி: *19-08-2000*

எமது குடும்பத் தலைவர் எம்மைப் பிரிந்து ஓராண்டு நிறைவு பெறும் இந்நாளில் அவர் திருவுருவை எமது இதயங்களில் இருத்தி எமது நன்றிகளை அவர் பாதமலர்களில் சமர்ப்பித்து எமது அன்பு நிறைந்த அஞ்சலிகளைச் செலுத்துகின்றோம்.

*மகாயோக மாளிகை,*
*சங்கானை.*

**மனைவி, மக்கள்**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**உறவினர்கள்.**

தகவல்:
**க. மகாலிங்கம்** (மகன்)
(சங்கானை ப.நோ.கூ. சங்கம்,
கிளை முகாமையாளர்.)

(77160)

---

# நீங்காத நினைவில் ஆண்டொன்று



## திருமதி முருகேசு மகேஸ்வரி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| **1926.05.16** | **1999.08.30** |

பாசத்துடன் எமை அரவணைத்த அம்மாவே!
ஆண்டொன்று ஓடி மறைந்தாலும் உங்கள் நினைவு
எம் நெஞ்சங்களை விட்டகலாது அம்மாவே!
ஏழேழு பிறவிகள் நாம் எடுத்தாலும் உங்கள்
கனவுகள் எமை விட்டகலாது அம்மாவே!
எமது இதயங்களில் அணையாத சுடராக
ஒளி விடும் அம்மாவே!
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

*'சாம்பவி'*
*வட்டு-தெற்கு, வட்டுக்கோட்டை.*

(77373)

# இடைக்கால நிர்வாக சபை மூலம்

# நாட்டைத்துண்டாட ஜனாதிபதிமுயற்சி

## ஜே. வி. பி அமைப்பு குற்றஞ் சாட்டுகிறது

கொழும்பு, ஓக. 19

வடக்கு — கிழக்குக்கு பத்து வருடங்களுக்கு இடைக்கால நிர்வாக சபை ஒன்றை அமைத்துச்சிங்கள, தமிழ் என மாகாணங்களைப் பிரித்துக் கொடுப்பதன் மூலம் நாட்டைத் துண்டாட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முற்படுகின்றார்.

மேற்கண்டவாறு ஜே.வி.பி அமைப்பின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ குற்றஞ் சாட்டியுள்ளார்.

அந்தக் கட்சியின் மாநாடு ஒன்றில் பேசுகையில் அவர் இப்படிக் குற்றம் சுமத்தியுள்ளார்.

அதில் பேசுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மக்களின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாது அதற்கெதிராக தன்னிச்சையாக நடந்து கொண்டு நாட்டைப் பிரிக்கும் சட்டமூலத்தைநிறைவேற்ற அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்தன. இது இந்த நாட்டில் வாழும் தமிழ், சிங்கள, முஸ்லீம் மக்களுக்குக் கிடைத்த பெரு வெற்றியாகும்.

அரசமைப்பை மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவு இல்லாவிட்டாலும் நிறைவேற்றுவோம் என அமைச்சர் எஸ். பி. திஸநாயக்க கூறியுள்ளார். அப்படி நடந்தால் அவர் விபரீத விளைவுகளுக்கு முகங் கொடுக்க நேரிடும்.

இன்று எம்மை அழிப்பது விடுதலைப் புலிகள் மாத்திரமல்ல நாட்டுக்குள் இருக்கும் வேறு பல புலிகளுங்கூட. அந்தப் புலிகள் பிரபாகரனை விடப் பயங்கரமான புலிகள்— இப்படி வீரவன்ஸ கூறினார்.

(க-186)

## 61 ஆம் நாள் நினைந்துருகல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1943 — 11 — 14 | 2000 — 06 — 20 |

### செல்வி சவிரிமுத்து அருள்திரேசா
(லீலா)

தந்தையே! உமது பேரன்புக் கேற்ப எனக்கு இரங்கும் உமது அளவற்ற இரக்கத்திற்கேற்ப என் குற்றங்களைத் துடைத்தருளும்


எல்லாம் வல்ல அன்புத் தந்தையே இறைவா! உமது அன்புப் பிள்ளையாகிய சவிரிமுத்து அருள்திரேசாவுக்காக உமக்கு நன்றி கூறுகின்றோம் எமது சகோதரியை உமது அன்புப் பிரசன்னத்திலே மகிமைப்படுத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம். நல்ல தகப்பனே எமது சகோதரியை பாவத்தின் பிடியிலே இருந்து விடுவித்து அவள் குற்றங்களை கழுவி நித்தியத்திற்கும் உமது அன்புப் பிரசன்னத்தில் சாந்தி அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்
தாய்,
சகோதர, சகோதரிகள்.

386, பாங்சால் வீதி,
யாழ்ப்பாணம்.

(77431)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 05 — 03 — 1993 | 20 — 07 — 2000 |

### அமரர் சின்னத்தம்பி செல்லத்தம்பி
(சாவகச்சேரி)

அன்புக்கும் பாசத்திற்கும் உறைவிடமாய்
விளங்கிய ஐயாவே!
அன்போடும் அறிவோடும் ஆற்றலோடும்
எமையெல்லாம் ஆளாக்கி வைத்த - ஐயாவே!
உங்களை இனி எப்பிறவியில் காண்போம் – ஐயா!
ஐயா என யாரை அழைப்போம் - ஐயா!
என்றென்றும் உங்கள் நினைவலைகள்
எம்மைவிட்டகலாது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

20 – 07 - 2000 அன்று இறைபதமெய்திய எமது குடும்ப ஒளிவிளக்கு - அவர்களது அந்தியேட்டி சபிண்டீகரணக்கிரியைகள் இன்று (19–08–2000) சனிக்கிழமை கொழும்பில் நடைபெறும்.

உங்கள் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

29, வைரவர் கோயில் வீதி,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்.
(77325)

38, B. சிறுபறி கார்டின்ஸ்,
பம்பலப்பிட்டி, கொழும்பு - 04
T. P. 590330

## சைக்கிள் தரிப்பு நிலையங்களின் கட்டணம் நிர்ணயம்

நல்லூர் மஹோற்சவகாலத்தை யொட்டி ஆலயச் சூழலில் அமைக்கப்பட்டுள்ள சைக்கிள் தரிப்பு நிலையங்களில் பாதுகாக்கப்படும் சைக்கிள் ஒன்றுக்கான கட்டணம் ஒரு ரூபாவாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்று யாழ். மாநகர ஆணையாளர் வெளியிட்டுள்ள பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப் பத்திரிகைக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சைக்கிள் பாதுகாப்பு நிலையங்களை நடத்துபவர்கள் ஒரு ரூபா கட்டணம் தமக்கு கட்டுப்படியாவதில்லை என்றும் பொதுமக்கள் தாமாகவே விரும்பி சைக்கிள் ஒன்றுக்கு இரண்டு ரூபா கட்டணம் வழங்குவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

சைக்கிள் உரிமையாளர்கள் சைக்கிள் தரிப்பு நிலையங்களில் தாமாகவே விரும்பி இரண்டு ரூபா கட்டணத்தைச் செலுத்துவதை நாம் ஆட்சேபிக்கவில்லை எனினும் சைக்கிள் ஒன்றுக்கு கட்டணம் ஒரு ரூபா மட்டுமே — என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம், ஓக. 19

நல்லூர் கந்தசாமி ஆலய மகோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் சைவ மகாசபையின் ஏற்பாட்டில் மேற்கு வீதி, ஸ்ரீமுத்துவிநாயகர் ஆலய மண்டபத்தில் பிற்பகல் 5 மணி முதல் 6 மணிவரை கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ நித்தியானந்தசர்மா நிகழ்த்தி வரும் 'மகாபாரதம்' இசைச் சொற்பொழிவுத் தொடரில் இன்று 'அரக்கு மாளிகை' எனும் தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறும்.

(க – 30)

★ ★ ★

வடபிராந்திய இந்துப் பேரவையின் ஏற்பாட்டில் அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெற்றுவரும் தெய்வீகச் சொற்பொழிவுத் தொடரில் இன்று 'சமய வாழ்வு' எனும் தலைப்பில் புலவர் க. திருநாவுக்கரசு உரைநிகழ்த்துவார்.

(க-30)

## நாளை நடப்பவை

யாழ்ப்பாணம், ஓக. 19

யாழ். கிராமிய மாவட்ட சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினரின் ஏற்பாட்டில் வடமராட்சிப் பகுதி முன்பள்ளி ஆசிரியர்களுக்கான முதலுதவிக் கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி முதல் கரணவாய் பொன்னம்பலம் மகாவித்தியாலயத்தில் இடம்பெறவிருக்கின்றது.

சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். சுப்பிரமணியம் தலைமையில் இக் கருத்தரங்கு இடம்பெறும்.

அன்றைய தினம் பிற்பகல் 2 மணிக்கு அதே பாடசாலையில், வடமராட்சி, தென்மராட்சி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான இடம்பெயர் சேவை, முதலுதவிப்பணிகள் தொடர்பான ஆய்வுப் பட்டறை ஆகியன மாவட்ட ஆணையாளர்ரி.என் போஜன் தலைமையில் நடைபெறவிருக்கின்றன.

(க-3)

★ ★ ★

புலோலியூர் க. தம்பையா எழுதிய 'அழியும் கோலங்கள்' நூல் வெளியீட்டு விழா, நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு புலோலி புற்றளை மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

இளைப்பாறிய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ். ஏகாம்பரநாதன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் வரவேற்புரையை எஸ். கதிர்காமத்தம்பியும் ஆசியுரையை சிவஸ்ரீ எஸ். ஜெயபாலச் சந்திரக் குருக்களும் நிகழ்த்துவார்கள்.

யாழ். பல்கலைக்கழக வணிக முகாமைத்துவபீடாதிபதி பேராசிரியர் எம் நடராஜசுந்தரம் நூலை வெளியிட்டு வைப்பார்.

புலோலி பிரபல தொழிலதிபர் த. உருத்திரா முதல் பிரதியைப் பெற்றுக் கொள்வார். யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி எஸ். சிவலிங்கராசா ஆய்வுரையை நிகழ்த்துவார்.

(க-109-173)

★ ★ ★

யாழ். இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் மூத்த எழுத்தாளர் நாவேந்தனின் நினைவஞ்சலிக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு ஆரியகுளம் சந்தியில் உள்ள தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் இடம் பெறவுள்ளது

செங்கை ஆழியான் தலைமையில் நடக்கும் இந்தக் கூட்டத்தில் பலர் அஞ்சலியுரை நிகழ்த்துவர்.

(க-3)

## சங்கானை ப.நோ.கூ. சங்கத்தின் பணியாளரின் 10 கோரிக்கைகள்

கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கத்தின் சங்கானைக்கிளை, சங்கானை பலநோக்குக்கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகள் குறித்த பத்துக் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை சங்க நிர்வாகத்திடம் சமர்ப்பித்துள்ளனர்.

சங்கத்தின் பொது முகாமையாளர் ஊடாக சங்கத் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் ஆகியோருக்கு கடந்த 9 ஆம் திகதி இந்த மகஜர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தமது நியாயமான கோரிக்கைகள் உதாசீனப்படுத்தப்பட்டால் இம்மாதம் 22 ஆம் திகதிக்கு பின்னர் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்,பிரதேச சபைத் தலைவர், பிரதேச செயலர். இராணுவ இணைப்பதிகாரி ஆகியோருக்கு முறையான அறிவித்தல் கொடுத்து தொழிற் சங்க பொதுச் சபையின் அங்கீகாரத்துடன் தொழிற் சங்க நடவடிக்கை மேற்கொள்ளப் போவதாக இந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரதிகள் யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், வலிகாமம் மேற்கு பிரதேச சபைத் தலைவர், சங்கானை இராணுவப் பொறுப்பதிகாரி, யாழ்.கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கத் தலைவர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(இ-135)

## நல்லை ஆதீன பீடாரோஹண விழா

யாழ்ப்பாணம், ஓக. 19

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தின் முப்பத்து நான்காவது பீடாரோஹண விழா எதிர்வரும் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறும்.

அன்றைய தினம் முற்பகல் 10 மணிக்கு குருமூர்த்த ஆலயத்தில் அபிஷேகமும், முற்பகல் 10.30 மணிக்கு பீடாபிஷேகமும், முற்பகல் 11 மணிக்கு பூசை வழிபாடும், முற்பகல் 11.30 மணிக்கு கொலு பூசையும், நண்பகல் 12 மணிக்கு பட்டினப் பிரவேசமும்— நண்பகல் 12.30 மணிக்கு மகேஸ்வர பூசையும் இடம்பெறவுள்ளன.

(க)


## மானிப்பாய் பரிஸ் லயன்ஸ் கழகம்

இலவச கண் பரிசோதனை
லயன் J. S. A. Fernando M.J.F.வும் சகோதரனும்

இடம்:- சுகாதார நிலையம், முள்ளி,
ஆனைக்கோட்டை.

திகதி:- 20–08–2000 (நாளை)

நாள்:- ஞாயிற்றுக்கிழமை

நேரம்:- காலை 9.00 மணி தொடக்கம்
பிற்பகல் 1.30 மணிவரை நடைபெறும்.

மருத்துவ பரிசோதனை

லயன் Dr. K. இரத்தினசிங்கம்
லயன் Dr. T. அருமைத்துரை
லயன் Dr. C. சுந்தரராஜன்
லயன் Dr. K. சிவனடியான்
லயன் செல்வி Dr. K. ஈஸ்வரி
மருத்துவ பீட மாணவர்கள்

லயன்
கா. செல்வரத்தினம்
தலைவர்.

லயன்
செ. கேசவராஜன்
செய் திட்டத் தலைவர்.

(77402)

# வன்னியில் இருந்து வரும் நோயாளிகள் 'வீடியோ' படம் எடுத்தபின்னரே அனுமதி

## வவுனியா படையினர் ஏற்பாடு

இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிகளில் இருந்து வவுனியா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக வருபவர்களை வீடியோப்படம் எடுக்கும் நடவடிக்கைகள் புதன்கிழமை தொடக்கம் படையினரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வைத்திய வசதிகள் மிகவும் குறைந்த வன்னிப் பிரதேச வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுகின்ற நோயாளர்கள் மேலதிக சிகிச்சைக்காக அம்புலன்ஸ் வண்டிகளின் மூலமாக வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு வரப்படுவது வழக்கமான நடவடிக்கையாகும். இவ்வாறு வருபவர்கள் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்கும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும் இடையேயான போக்குவரத்துக்குரிய வீதி அமைந்துள்ள இடமாகிய பிரமனாலங்குளம் சோதனைச் சாவடியில் வைத்து படையினரால் தீவிரமாகச் சோதனை இட்டு விசாரணை செய்த பின்பே இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிக்குள் வருவதற்கு படையினரால் அனுமதிக்கப்படுகின்றனர்.

இருப்பினும் அவ்வாறான நோயாளிகள் வவுனியா வைத்தியசாலைக்கு வந்த பின்னர் வெளியில் எங்கும் செல்வதற்கு அனுமதிக்கப்படுவதில்லை.

அவ்வாறு செல்ல விரும்புபவர்கள் பொலீஸாரினால் வழங்கப்படுகின்ற வதிவிட அனுமதிப் பத்திரத்தைப் பெறவேண்டும். தீவிரமான விசாரணைகளின் பின்னரே இத்தகைய வதிவிட அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படுகின்றன. அப்படியிருந்தும் வவுனியா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக சுகாதார அமைச்சின் நடைமுறைகளுக்கு ஏற்ப அனுப்பி வைக்கப்படுகின்ற நோயாளிகளான தம்மை படையினர் வீடியோப்படம் எடுத்தது குறித்து விசனம் தெரிவித்துள்ளதுடன் அச்சமுமடைந்துள்ளனர்.

# கொழும்பில் நூல் வெளியீட்டு விழா

கவிஞர் தில்லைச்சிவனின் 'இரு காவியங்கள்' நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் செ.குணரத்தினம் தலைமையில் நடைபெறுவுள்ளது.

இந்நூலுக்கான நயவுரையை மாவை வரோதயன், பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை முன்னாள் அதிபர் ஆர்.எஸ்.நடராசா, 'மித்திரன்' வாரமலர் ஆசிரியர் திருமதி சூரிய குமாரி ஸ்ரீதரன், காவலூர் இராசதுரை, சோ.தேவராசா ஆகியோரும் சிறப்புரையை 'தினக்குரல்' பிரதம ஆசிரியர் ஆ.சிவநேசச்செல்வன், கல்வியமைச்சின் மேலதிகச் செயலாளர் உடுவை தில்லை நடராசா, பளை மகாவித்தியாலய முன்னாள் அதிபர் அ.பொ.செல்லையா ஆகியோரும் நிகழ்த்துவர்.

'குடும்பச்சுமையை அதிகம் சுமப்பது கணவனா? மனைவியா?' என்ற தலைப்பில் சிறப்புப் பட்டிமன்றம் இடம் பெறும். (ஐ-173)

# செய்திச் சாரம்

## மிதிவெடியில் சிக்கிய மாடுகள்

நெல்லியடி,ஓக.19

புலோலி பல்லப்பை இராணுவ முகாம் பகுதியில், ஒரு வார காலத்தில் இரு மாடுகள் மிதிவெடியில் சிக்கி, கால்களை இழந்துள்ளன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணியளவில், இப்பகுதியில் நடமாடிய பசுமாடு ஒன்று பின்னங்கால் ஒன்றையும் கடந்த புதன்று மாலை 5 மணியளவில் இப்பகுதியில் நடமாடிய பசுமாடு ஒன்று முன்னங்கால் ஒன்றையும் மிதிவெடியில் இழந்துள்ளன. (ஐ-109)

## நாய்கள் நஞ்சூட்டி அழிப்பு

நெல்லியடி,ஓக.19

பருத்தித்துறை பிரதேசசபை எல்லைக்குட்பட்ட துன்னாலை போதராமடம், வல்லிபுரக்குறிச்சி, துன்னாலை வடக்கு ஆகிய இடங்களில் உள்ள கட்டாக்காலி நாய்கள் நாளை மறுதினம் திங்கள் காலை நஞ்சூட்டி அழிக்கப்படவிருக்கின்றன.

இப்பகுதியில் உள்ள வளர்ப்பு நாய்களை அன்றைய தினம், கட்டி வளர்க்குமாறு, துன்னாலை பிரிவு பொது சுகாதாரப் பரிசோதகர் க. இளங்கோ தெரிவித்துள்ளார். (ஐ-109)

## மலேரியா ஒழிப்பு சேவை

நெல்லியடி,ஓக.19

சாவகச்சேரி பொது சுகாதார பரிசோதகர் பிரிவில் மலேரியா தடை இயக்கத்தின் நடமாடும் சேவை கடந்த வாரம் இடம்பெற்றது.

வரணி இயற்றாலை, தாவளை இயற்றாலை ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற இந் நடமாடும் சேவையில், சுமார் 75க்கும் மேற்பட்ட காய்ச்சல் நோயாளிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். (ஐ-10)

## ரூ.2ஆயிரம் கொடுப்பனவு வங்கிக்கு

யாழ்ப்பாணம்,ஓக.19

பளை மற்றும் மருதங்கேணி ஆகிய இடங்களில் இருந்து இடம் பெயர்ந்து யாழ்.பிரதேச செயலாளர் பிரிவில் தமது பதிவை மேற்கொண்டவர்களுக்கான இரண்டாயிரம் ரூபா கொடுப்பனவு உரிய வங்கிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்டவர்கள் தமது வங்கிகளில் கொடுப்பனவைப் பெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## பருத்தித்துறையில் ஒரே நாளில் 5 கப்பல்கள்

நெல்லியடி,ஓக.19

பருத்தித்துறை துறைமுகத்தில் நேற்று முன்தினம் ஒரே தடவையில் 5 கப்பல்கள் சரக்குகள் மற்றும் பயணிகள் ஏற்றும் பணியில் ஈடுபட்டிருந்தன.

சமீப காலத்தில் ஒரே நாளில் இரண்டுக்கு மேற்பட்ட கப்பல்கள் பருத்தித்துறை துறைமுகத்தை பயன்படுத்தியது இதுவே முதல் தடவையாகும்.

செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் கப்பல், 'சிற்றி ஒவ் றிங்கோ' இவை இரண்டும் பயணிகளை ஏற்றி இறக்கும் பணியிலும், 'இந்துருவலி' கப்பல் விவசாய உற்பத்திப் பொருள்களை ஏற்றும் பணியிலும் 'சஜிந்த' 'ஹெறந்தல' ஆகிய கப்பல்களிலிருந்து பொருள்கள் இறக்கும் பணியும் இடம்பெற்றன.

5 கப்பல்களும் ஒரே நாளில், ஒரே நேரத்தில் பருத்தித்துறை துறைமுகத்தில் தரித்து நின்றதனால், துறைமுகப்பகுதி களை கட்டி இருந்ததைக் காணமுடிந்தது. (ஐ-109-173)

## வயோதிபர் இல்லத்துக்கு முச்சக்கரவண்டி

மூளாய்,ஓக.19

மூளாயில் இயங்க ஆரம்பித்திருக்கும் கைதடி வயோதிபர் இல்லத்துக்கு மூன்று முச்சக்கர வண்டிகளை யாழ்செயலகம் வழங்கியுள்ளது. இங்கு தங்கியிருக்கும் வயோதிபர்களின் பாவனைக்காகவே இவை வழங்கப்பட்டுள்ளன. (ஐ-99)

# கையெழுத்துச் சஞ்சிகை போட்டியில் கந்தரோடை மாணவர்கள் சாதனை

வலிகாமம் தெற்கு,ஓக.19

உடுவில் கல்விக் கோட்ட பாடசாலை மாணவர்களிடையே ஐந்து பிரிவுகளாக இவ்வருடம் நடத்தப்பட்ட கோட்டமாவட்ட கையெழுத்துச் சஞ்சிகைப் போட்டியில் ஐந்து பிரிவிலும் கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலய மாணவர்களின் ஆக்கங்கள் முதலிடம் பெற்றுள்ளன.

கல்லூரி நிலையில் நடைபெற்ற போட்டியில் இணுவில் மத்திய கல்லூரி முதலிடம் பெற்றுள்ளது.

முதலிடம் பெற்ற சஞ்சிகைகள் வலயமட்ட போட்டிகளில் பங்கு பற்றத் தகுதிபெற்றுள்ளன.

கடந்தவருடம் நடைபெற்ற போட்டிகளிலும் கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலய மாணவர்களின் நான்கு ஆக்கங்கள் வலய மட்டத்திலும் கோட்ட மட்டத்திலும் மூன்று ஆக்கங்கள் வலய மட்டத்திலும் முதலிடம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கோட்டமட்ட போட்டியில் தெரிவு செய்யப்பட்ட ஆக்கங்களின் விவரம் வருமாறு:-

### பாலர் கீழ்ப்பிரிவு

'தேமதுரம்' கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை - 'ஓசை' - புன்னாலைக்கட்டுவன் அ.த.க. பாடசாலை, 'பூந்தளிர்' -ஏழாலை தெற்கு அ.மி.த.க.பா.

### பாலர் மேற்பிரிவு

'படி' - கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை, 'கலைக்கதம்பம்' இணுவில் இந்துக் கல்லூரி, 'வெண்ணிலா' - உடுவில் முருகமூர்த்தி வித்தி.

### இடைநிலைப்பிரிவு

'தமிழமுது' -கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை, 'திசை ஒலி' - இணுவில் மத்திய கல்லூரி, 'தீபம்'-உடுவில் முருகமூர்த்தி வித்தி.

### இடைநிலைப்பிரிவு 2

'விடிவெள்ளி' - கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை, 'மலரும் மொட்டுக்கள்' - இணுவில் இந்துக்கல்லூரி, 'தளிர்'- இணுவில் மத்தியகல்லூரி.

### இடைநிலைப்பிரிவு 3

'விழுதுகள்' - கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை, 'தாரகை' - உடுவில் முருகமூர்த்தி வித்தி, 'விருட்சம்' -உடுவில் மான்ஸ் ம.வி.

### கல்லூரி நிலைப்பிரிவு

'முழங்கு தமிழோசை'-இணுவில் மத்திய கல்லூரி, 'வித்தியா' - ஏழாலை ம.வி., 'விழித்திடும் சுடர்கள்' - இணுவில் இந்துக்கல்லூரி.(ஐ-152)

# வவுனியா தாக்குதல் குறித்து புலன் விசாரணைக்கு உத்தரவு

வவுனியா நகரசபை மண்டப வாயிலில் கடந்த புதன்கிழமை மாலை படையினரின் வாகனம் மீது இடம் பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல் தொடர்பாக புலன்விசாரணைகளை மேற்கொள்ளுமாறு வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன் உத்தரவிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் காலை தாக்குதல் சம்பவம் நடைபெற்ற இடத்தை நேரில் சென்று பார்வையிட்ட அவர் இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு வவுனியா பொலீஸ் குற்றத்தடுப்புப் பிரிவின் பதில் பொறுப்பதிகாரிக்கு உத்தரவிட்டார்.

வவுனியாவின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்தவர்களுக்கு நிரந்தர பொலீஸ்வதிவிட அனுமதிப்பத்திரங்களை (பாஸ்) வழங்கிய இராணுவப் புலனாய்வுப் பிரிவைச்சேர்ந்த லெப்டினன்ட் பாலசூரியவை இலக்கு வைத்தே இந்த தற்கொலைக் குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டதாக ஆரம்ப விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

பாஸ் வழங்குவதற்குப் பொறுப்பாகவிருக்கும் லெப்பாலசூரிய தனது கடமையை முடித்துக் கொண்டு முகாம் திரும்புவதற்காக நகர மண்டபவாயிலில் நிறுத்தப்பட்டிருந்த இராணுவத்தினரது 'டொல்பின்' ரக வானில் ஏறுவதற்காக வந்துள்ளார். இவ்வேளையில் நகரசபை மைதானத்துக்குச் செல்லும் நுழைவாயிலுக்கும் இடைப்பட்ட பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த ஓட்டோவில் தற்கொலைக்குண்டுதாரி மறைந்திருந்தாகவும், லெப்டினன்ட் பாலசூரிய அங்கு வந்து வானில் ஏறிய பின்னர் தற்கொலைக்குண்டுதாரி பாலசூரியவின் வாகனத்தின் மீது பாய்ந்த போதே அவரது உடலில் பொருத்தப்பட்டிருந்த குண்டு பாரிய சத்தத்துடன் வெடித்தாகவும் பொலீஸார் தெரிவித்துள்ளனர். (ஐ-6)

# அரசின் புள்ளி விவரக் கோவையில் தமிழர் பற்றிய தகவல்கள் குறைப்பு

## ஈ.பி.டி.பி. உறுப்பினர் நாடாளுமன்றில் விசனம்

கொழும்பு,ஓக.19

நாட்டின் முழுமையான தகவல்களை உள்ளடக்காத புள்ளிவிவரக் கோவையை பூரணத்துவம் உடையதாக ஏற்றுக் கொள்ள முடியாது. புள்ளிவிவரத்திணைக்களத்தால் 1999ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டுள்ள தகவல்களில் வடக்கு - கிழக்கு வாழ் தமிழர்கள் பற்றிய தகவல்கள் பூரணமாக உள்ளடக்கப்படாததால் அது வாபஸ் பெறப்பட வேண்டும் என்று யாழ்.மாவட்ட ஈ.பி.டி.பி.உறுப்பினர் கலாநிதி கே.விக்னேஸ்வரன் நாடாளுமன்றத்தில் கேட்டுக் கொண்டார்.

நிதி அமைச்சின் கீழான திருத்தச்சட்ட மூல விவாதத்தில் பேசிய அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த புள்ளி விவரத் தகவல்களில் இலங்கை, இந்திய தமிழர்கள் பற்றிய தகவல்கள் குறைத்துக் காட்டப்பட்டுள்ளன.

அதன்படி இந்துக்களின் எண்ணிக்கை 7,90,000 என்றும் அதன் விகிதாசாரம் 7.51 வீதம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தோடு இலங்கைத் தமிழர்கள் 5.3 வீதமாகவும் இந்தியத் தமிழர்கள் 3.6 வீதமாகவும் காட்டப்பட்டிருப்பதோடு வடக்கு - கிழக்கு பகுதிகளின் தமிழர் பற்றிய தொகை இதில் உள்ளடக்கப்படவில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது ஒரு முழுமையான தகவல் என்று நாம் ஏற்றுக் கொள்ள முடியாதிருக்கின்றது. இந்தப் புள்ளி விவர வெளியீடு பூரணத்துவம் உடையதாக அமைய வேண்டுமானால் 1980 ஆம் ஆண்டின் புள்ளி விவரத்தகவல்களை அடிப்படையாண்டாக கொண்டு அதன்பின்னர் அது பற்றி மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்வுகளில் இருந்து முழுமையான தகவல்களைப் பெற்று உள்ளடக்க வேண்டும்.

அதேபோன்று இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக இந்த அரசாங்கம் முன்வைத்துள்ள அரசமைப்பானது 13 ஆவது திருத்தச்சட்டத்தை விட மேலும் கூடுதலான உரிமைகளை தமிழர்களுக்கு வழங்குவதாக அமைந்திருக்கின்றது - என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-6)

# கப்பலில் தபால் பொதிகள்

யாழ்ப்பாணம்,ஓக.19

பருத்தித்துறைக்கு நேற்று முன்தினம் வந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில் குடாநாட்டுக்கான வெளியூர்த்தபால்கள் அடங்கிய 111 தபால் பொதிகள் எடுத்துவரப்பட்டன.

இதே கப்பலில் குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட தபால்கள் அடங்கிய 54 தபால் பொதிகள் அனுப்பி வைக்கப்பட்டதாக தபால் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை -

கடந்த வாரம் எடுத்துவரப்பட்ட சாதாரண முத்திரைகள் வண்ணார்பண்ணை ,உரும்பிராய், காரைநகர், அச்சுவேலி, கோப்பாய், கரவெட்டி காங்கேசன்துறை, பருத்தித்துறை ஆகிய தபால் நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (இ-10)

# கல்வியங்காடு, கோப்பாய் பகுதியில் இடம்பெயர்ந்தோர் விவரம் பதிவு

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கல்வியங்காடு (ஜே-113) கிராம அலுவலர் பிரிவில் இருந்து இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கும் 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட உள்ளது. இதற்கான பதிவுகள் கிராம அலுவலரினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தப் பிரிவில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கும் கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் என்று பொது அமைப்புகள் கோரி இருந்தன.

இதேவேளை -

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிலும் சில கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த குடும்பங்களுக்கு இக் கொடுப்பனவை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கோப்பாயில் ஜே-257, ஜே-258, ஜே-260 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் இருந்து இடம்பெயர்ந்த குடும்பங்களின் விவரங்கள் பதிவு செய்யப்பட்டு வருகின்றன. (ஐ-180)

# பொது நுண்ணறிவு பரீட்சைக்கான கருத்தரங்குகளுக்கு ஏற்பாடு

வடமராட்சி,ஓக.19

ஜீ.சி.ஈ உயர்தரப்பரீட்சையில் இவ்வாண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பொது நுண்ணறிவுப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நலன் கருதி பயிற்சிப்பரீட்சையும் கருத்தரங்கும் நடத்தப்படவுள்ளன.

யாழ்.மத்திய கல்லூரி லியோக் கழகமும் வடமாகாண அதிபர் சங்கமும் இணைந்து இப்பயிற்சிப் பரீட்சையையும் கருத்தரங்கையும் ஏற்பாடு செய்துள்ளன.

முதலாவது பயிற்சிப்பரீட்சையும், கருத்தரங்கும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு கரவெட்டி திரு இருதயக் கல்லூரியிலும், காலை 10 மணிக்கு பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியிலும் நடைபெறவுள்ளன.

தொடர்ந்து இப்பயிற்சிப்பரீட்சையும் கருத்தரங்கும் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியிலும், 10 மணிக்கு தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும் நடைபெறவுள்ளன.

பயிற்சிப் பரீட்சையிலும் கருத்தரங்கிலும் பங்கு பற்ற விரும்பும் உயர்தரவகுப்பு மாணவர்கள் சம்பந்தப்பட்ட பாடசாலைகளில் முதல் நாளே பதிவு செய்து பங்கு பற்றுதலை உறுதிப்படுத்துமாறு வடமாகாண அதிபர்கள் சங்கத் தலைவர் க.இராசதுரை தெரிவித்துள்ளார்.

# தேர்தல் கண்காணிப்புப் பணிக்கு ஐரோப்பிய யூனியன் 100 பேரை அனுப்பும்

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் கண்காணிப்பாளர்களாகப் பணிபுரிய நூறுபேரை அனுப்ப ஐரோப்பிய யூனியன் முன்வந்துள்ளது.இலங்கை அரசாங்கமும் ஐ.தே.கவும் விடுத்த கோரிக்கையை அடுத்து இவர்களை அனுப்ப இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

இதற்கு முன்னோடியாக இங்குள்ள நிலைமைகளை ஆராய ஐரோப்பிய யூனியனில் இருந்து நால்வர் அடங்கிய குழு ஒன்று கொழும்பு வந்துள்ளது.

இந்தக்குழு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடனும், தேர்தல் ஆணையாளருடனும் கலந்துரையாடி வருகின்றது. (இ-3)



ஆசிரியர் நியமனங்களில் பாதிக்கப்பட்டவர்கள் முன்பாக நாடாளுமன்ற உறுப்பினர் வி.கே.குகேந்திரன் உரையாற்றும்போது எடுக்கப்பட்ட படம். அவருக்கு அருகே மாகாணக் கல்வி அமைச்சுச் செயலாளர் க.பரமேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.தவராசா, யாழ். மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் கலாநிதி என்.தனிகாசலம்பிள்ளை ஆகியோர் காணப்படுகின்றனர். படம்: பொ.இராஜேஸ்வரன்

# யாழ். மத்திய கல்லூரியில் நேற்று மக்கள் குறைகேள் செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஓக.19

யாழ். அரச செயலகமும் வடக்கு, கிழக்கு மாகாண சபையும் இணைந்து நடத்திய மக்கள் குறைகேள் செயலமர்வு நேற்று யாழ். மத்திய கல்லூரியில் ஆரம்பமானது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.டி.பி செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா மங்கள விளக்கை ஏற்றி வைத்து நிகழ்வினை ஆரம்பித்து வைத்தார்.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான வி.தவராசா, கே.வி.குகேந்திரன் (ஜெகன்), ஆர். மதனராஜன் ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

கல்வி, சுகாதாரம், உள்ளூராட்சி, விவசாயம், மின்சாரம், ஓய்வூதியம், புனர்வாழ்வு நிவாரணக் கொடுப்பனவுகள், வங்கிகள், தபால் தொலைத்தொடர்பு, மிதிவெடி, பிறப்பு, இறப்பு, திருமணப்பதிவு, அடையாள அட்டை போன்ற பல பிரிவுகளை உள்ளடக்கி 26 அறைகளில் இந்தச் செயலமர்வு இடம் பெற்றது.

வடக்கு-கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் ஜி.கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்தச் செயலமர்வில் மாகாண கல்விப்பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் க.பரமேஸ்வரன் மாகாண பொதுநிர்வாக உள்ளூராட்சிக் கூட்டுறவு, வீதி அபிவிருத்தி தொழிற்துறை அமைச்சு செயலாளர் க.பரமலிங்கம், வட மாகாண புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபையின் பொது முகாமையாளர் வேதநாயகம் உட்பட மாகாண அமைச்சின் அதிகாரிகளும், செயலக அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

பகுதிநேர ஆங்கில ஆசிரியர் சங்கம், ஆரம்ப ஆசிரியர் தெரிவில் பாதிக்கப்பட்டோர் சங்கம், குடும்ப நல சுகாதார சேவையாளர் சங்கம், பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், வேலையற்ற பட்டதாரிகள் சங்கம், காணாமல்போனோர் உட்பட பல அமைப்புகளின் பிரதிநிதிகளும், பொதுமக்களும் தங்கள் பிரச்சினைகளைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர்.

நேற்றைய செயலமர்வில் நூற்றுக்கணக்கான பிரச்சினைகள் முன் வைக்கப்பட்டன என்றும் இவற்றில் சிலவற்றிற்கு உடனடியாகத் தீர்வு காணப்பட்டதாகவும் யாழ். செயலக அதிகாரி ஒருவர் கூறினார்.

இதேவேளை ஆரம்ப ஆசிரியர் நியமனத்தில் பாதிக்கப்பட்ட சங்கத்தைச் சேர்ந்தவர்கள் யாழ். நகர வீதிகளில் ஊர்வலமாகத் திரண்டு வந்து யாழ். மத்திய கல்லூரியில் கூடிநின்றனர். இதே போன்று பகுதி நேர ஆங்கில ஆசிரியர் சங்க உறுப்பினர்களும் மேற்படி மைதானத்தில் குழுமி நின்றனர்.

இருபகுதியினரையும் மாகாண கல்வி அமைச்சு செயலாளர் க.பரமேஸ்வரன், முன்னாள நாடாளுமன்ற உறுப்பினர்களான வி.தவராசா, கே.வி.குகேந்திரன் ஆகியோர் நேரில் சந்தித்து பிரச்சினைகளைக் கேட்டறிந்து கொண்டனர்.

மாலை 4 மணிவரை நேற்றைய செயலமர்வு இடம்பெற்றது. இந்த செயலமர்வு இன்றும் தொடர்ந்து நடைபெறவுள்ளது.(இ-5-15-180-173)

# வெற்றிடத்துக்கு ஏற்ப கட்டம் கட்டமாக ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படும்

## பாதிக்கப்பட்டோர் சங்க உறுப்பினர்களிடம் கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.19

ஒவ்வொரு வருடமும் ஏற்படும் ஆசிரியர் வெற்றிடங்களுக்கு ஏற்ப கட்டம் கட்டமாக ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படும்.

மேற்கண்டவாறு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் க.பரமேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்.மத்திய கல்லூரியில் குழுமியிருந்த ஆரம்ப ஆசிரியர் நியமனத்தில் பாதிக்கப்பட்ட சங்க உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

ஒவ்வொரு வருடமும் ஓய்வு பெறுவோர் மற்றும் விலகுவோரினால் 700 அல்லது 800 ஆசிரியர் வெற்றிடங்கள் ஏற்படுகின்றன. அதனால் ஆசிரியர் நியமனங்கள் செய்யப்படவேண்டிய தேவைகளும் ஏற்படுகின்றன.

பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களை நிரந்தரமாக்குவது பெரும் சிரமமான விடயமாகும். வடக்கு - கிழக்குமாகாணத்தில் ஆயிரம் ஆங்கில ஆசிரியர்களுக்கு வெற்றிடங்கள் இருக்கின்றன.

இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு தற்காலிகமாக ஓய்வுபெற்றவர்கள் நியமனம் செய்யப்பட்டனர். ஓய்வுபெற்றவர்களினால் இந்த வெற்றிடங்களை முழுமையாக நிரப்ப முடியாதிருந்தமையால் இளம் வயதினருக்கும் தற்காலிக நியமனம் வழங்கப்பட்டன.

ஆரம்ப ஆசிரியர்களாக நியமனம் பெற்று பல்கலைக்கழகங்களில் கற்றுக்கொண்டிருப்பவர்கள் பற்றி கவனமாக இருக்கின்றோம். அவ்வாறு எவராவது இருந்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

பல்கலைக்கழகத்தையும், பாடசாலையையும் ஏமாற்றும் இவர்களின் ஆசிரியர் நியமனம் நிறுத்தப்படுவதுடன் இவர்களுக்கு வழங்கப்பட்ட சம்பளங்களும் மீளப் பெறப்படும் - என்றார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான வி.தவராசா, கே.வி. குகேந்திரன் (ஜெகன்) ஆகியோரும் இச் சந்திப்பில் கலந்துகொண்டு விளக்கமளித்தனர்.

(இ-5)

# புதிய அரசமைப்பைப் புலிகள் ஏற்காவிடில் அவர்களை முற்றாக அழிக்கத் தயார்!

## அமைச்சர் திஸநாயக்க கூறுகிறார்

கொழும்பு,ஓக.19

அரசமைப்புச் சீர்திருத்தச் சட்டநகலை விடுதலைப்புலிகள் ஏற்காத பட்சத்தில் அவர்களை முற்று முழுதாக அழிக்க ஏற்பாடுகள் தயார் நிலையில் உள்ளன.

இப்படி சமுர்த்தி, இளைஞர் விவகார அமைச்சரும், சுதந்திரக் கட்சியின் செயலாளருமான எஸ்.பி. திஸநாயக்க தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் காலி மாவட்ட இளைஞர்கள் மாநாட்டில் பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

புதிய அரசமைப்புச் சட்டநகலை அறிமுகம் செய்வதன் மூலம் வடக்கு - கிழக்கு மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யமுடியும் என்பதைப் புத்திசாலிகள் உணர்வார்கள். இதனை பிரபாகரனும் அவரது சகாக்களும் ஏற்க மறுக்கும் பட்சத்தில் எமது நாட்டுக்கு சர்வதேச மட்டத்தில் யுத்தத்துக்குத் தேவையான ஆயுதங்களும், உபகரணங்களும் மற்றும் பொருளாதார உதவிகளும் கிடைக்கும். பிரபாகரனையும் புலிகளையும் ஒழித்துக்கட்டும் ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளன.

இன்று தென்னிலங்கையின் பௌத்த பிக்குமார்களையும், சிங்கள மக்களையும் திசை திருப்பி நாட்டில் குழப்ப நிலையை உருவாக்க சில அரசியல் கட்சிகளும், இனவாதிகளும் திட்டமிட்டு வருகின்றனர். ஜனாதிபதியால் அறிமுகம் செய்யப்பட்டுள்ள புதிய அரசமைப்பை நன்கு படித்துப் பாருங்கள். வேண்டிய நேரத்தில் இடைக்கால நிர்வாக சபையைக் கலைத்துவிடமுடியும். இதனைத் தென் மாகாண மக்கள் நன்றாகப் புரிந்து கொள்ளவேண்டும். ஏனைய தமிழ்க் கட்சிகள் ஏற்றுள்ளபடி இதனைப் பிரபாகரனும் ஏற்றுத்தான் ஆக வேண்டும். இனியும் தொடர்ந்து யுத்தம் வேண்டும் என்றால் நிலைமை பயங்கரமாக மாறும் என்பதில் சந்தேகமில்லை. புதிய அரசமைப்பு மூலம் சமாதானத் தீர்வை புலிகள் ஏற்றாக வேண்டும். இல்லாத பட்சத்தில் உலக நாடுகள் பிரபாகரனையும் அவரது சகாக்களையும் முற்று முழுதாக அழித்தொழிக்க சகல உதவிகளையும் எமது அரசாங்கத்துக்குத் தந்து உதவ முன்வந்துள்ளன. எனவே தெற்கில் வாழ்கின்ற பௌத்த, தமிழ், முஸ்லிம் மக்கள் இது விடயமாக அலட்டிக் கொள்ளத் தேவையில்லை - என்றார்.

# மேலதிக துருப்புகள், நவீன ஆயுதங்கள் பிரச்சினையைத் தீர்த்துவிடப்போவதில்லை

## நோர்வே முன்னாள் பிரதமர் தெரிவிப்பு

மேலதிக துருப்புகளும், நவீன ஆயுதங்களும் பிரச்சினையைத் தீர்க்கமாட்டா. நாட்டினதும், மக்களினதும் நலனை மனதில் கொண்டு இதயசுத்தியுடன் பேச்சு நடத்துவதன் மூலமே நிரந்தர தீர்வைக் காணமுடியும்.

மேற்கண்டவாறு நோர்வேயின் முன்னாள் பிரதமரும், நாடாளுமன்றக் குழுத் தலைவருமான ஜெல் மக்கே பொண்டேவிக் தெரிவித்தார்.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமரர் ஏ.சி.எஸ்.ஹமீத் ஞாபகார்த்த வைபவத்தில் பேசுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சமாதானம் வானத்திலிருந்து வீழ்கின்ற ஒன்றல்ல. அது உணர்வுபூர்வமான விடயங்களை நேரகாலம் பாராது பொறுமையுடன் கலந்தாலோசிப்பதன் மூலமாக எட்டப்படவேண்டியது.

சமாதானத்திற்கான ஏது நிலையை உருவாக்குவதற்கு மிகவும் அத்தியாவசியமான மூலமாக விளங்குவது நம்பிக்கையைக் கட்டியெழுப்புவது ஆகும்.

எதிர்காலத்தில் நம்பிக்கை நாதமாக விளங்குகின்ற இளைஞர், யுவதிகளின் உயிர்கள் தியாகம் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்ற நிலையை நாம் கைவிடவேண்டும் - என்றார்.

(இவரின் உரையின் ஒரு பகுதி நேற்றைய உதயனில் வெளியாகி இருந்தது).

## பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி இடமாற்றம்

யாழ்ப்பாணப் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக இன்ஸ்பெக்டர் வணிகசேகர இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் கடமையாற்றிய கோப்பாய் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக யாழ்ப்பாணத்தில் பணிபுரிந்த இன்ஸ்பெக்டர் சேனநாயக்கா இடமாற்றம் பெற்றுள்ளார். (இ-3)

## 'கியூடெக்' உதவி

தென்மராட்சி மற்றும் வலிகாமம் பகுதிகளில் அண்மைக்கால போர் அனர்த்தங்களினால் படுகாயங்களுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களுக்கும் ஷெல்லினால் இறந்தவர்களின் குடும்பங்களுக்கும் 'கியூடெக்' நிறுவனம் தலா இரண்டாயிரம் ரூபாவை வழங்கியுள்ளது.

இதேவேளை - இடம் பெயர்ந்த வறுமைக்கோட்டின் கீழ்வாழும் இரண்டாயிரத்து ஏழு சிறுவர்களுக்கு இந்நிறுவனம் கடந்த இரண்டு மாதங்களாக நாள்தோறும் பால்மாவை வழங்கி வந்தது. (க)

## நேர்முகப் பரீட்சைக்கு மேலும் நால்வர்

எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ். செயலகத்தில் இடம்பெறவுள்ள நூலகர் பதவிக்கான நேர்முகப் பரீட்சைக்கு மேலும் நால்வர் அழைக்கப்பட்டுள்ளனர்.

பி.கலாவதி (5, ராஜ வீதி, நல்லூர்), எஸ்.விஜயலட்சுமி (பங்களா லேன், மல்லாகம்), பீ.பூங்போதை (பிரம்படி லேன், கொக்குவில்), என். குணவதி (மீசாலை கிழக்கு) ஆகியோரே அழைக்கப்பட்டவர்களாவர்.





யாழ். மத்திய கல்லூரியில் நேற்று நடந்த மக்கள் குறைகேள் செயலமர்வின்போது யாழ். அரச அதிபர் க.சண்முகநாதன் மக்களின் குறைகளைக் கேட்பதை மேலேயுள்ள படத்திலும், அதில் பங்குபற்ற மக்கள் வரிசையில் சென்றுகொண்டிருப்பதைக் கீழேயுள்ள படத்திலும் காணலாம்.

# தீர்வுகாண முடியாத பிரச்சினைகள் உடனடியாக உரியோர் கவனத்திற்கு

## மாகாண அமைச்சின் பிரதம செயலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.19

மக்கள் குறைகேள் செயலமர்வில் உடனடியாகத் தீர்வு காண முடியாத பிரச்சினைகள் ஆளுநர், அமைச்சர்கள், ஜனாதிபதி ஆகியோரின் கவனத்திற்குக் கொண்டு வரப்படும்.

இவ்வாறு மாகாண அமைச்சின் பிரதம செயலாளர் ஜி.கிருஷ்ணமூர்த்தி தெரிவித்தார்.

இது தொடர்பாக யாழ்.மத்திய கல்லூரியில் நேற்று நடைபெற்ற குறைகேள் செயலமர்வில் உதயன் செய்தியாளரிடம் அவர் மேலும் கூறுகையில், இந்தச் செயலமர்வில் கிடைக்கும் முறைப்பாடுகளுக்கு நிர்வாக ரீதியாக எம்மால் முடிவுகள் எடுக்கமுடியாது. ஆனாலும் உரியவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு தீர்வுகள் காணப்படும்.

யாழ். மாவட்ட மக்களைப் பொறுத்தவரையில் இந்த அமர்வு ஒரு நல்ல சந்தர்ப்பம். இதனைப் பயன்படுத்தித் தமது பிரச்சினைகளை அவர்கள் வெளிப்படுத்த வேண்டும் - என்றார். (இ-5)

## உதவித்திட்டம்

வலிகாமம் மேற்கில் வசிக்கும் அங்கவீனர்கள் மற்றும் ஊனமுற்றவர்களுக்கு உதவித்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இந்த உதவித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஆரம்ப ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கிராம உத்தியோகத்தர் பிரிவு ரீதியாக ஊனமுற்றவர்களது விவரங்களைத் திரட்டும் முயற்சியில் வலி.மேற்கு பிரதேச செயலகம் ஈடுபட்டு வருகிறது. இந்த உதவித் திட்டத்தின் படி ஊன்றுகோல்கள், முச்சக்கரவண்டிகள், வெள்ளைப் பிரம்பு, மூக்குக்கண்ணாடிகள், காது கேட்கும் கருவி என்பன வழங்கப்படவுள்ளன. இவை தேவைப்படுவோர் தமது வைத்திய சான்றிதழ்களுடன் தமது பகுதி கிராம உத்தியோகத்தரிடம் விவரங்களைப் பதியுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## சமுகமளிக்கவும்

யாழ்ப்பாணம்,ஓக.19

வேலணை பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் சகல வெளிக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள் அனைவரையும் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு அலுவலகத்துக்குத் தவறாது சமுகம் தருமாறு பிரதேச செயலாளர் செ.இரத்தினம் கேட்டுள்ளார். (இ-7)

## யாழ்ப்பாணத்தில் வெளிநாட்டு செய்தியாளர்கள்

ஆஸ்திரேலிய மற்றும் அமெரிக்கப் பத்திரிகைகளின் செய்தியாளர்கள் மூவர் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

ஆஸ்திரேலியா ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தெற்காசியச் செய்தியாளர் ஜின்னி எஸ்ரின், அமெரிக்க பத்திரிகையான வஹரஸ்ட் ரிபூன் செய்தியாளர் தோமஸ் சிரம்ரன், தாய்லாந்து வெளிநாட்டு செய்தியாளர் சங்கத் தலைவி பிலிப்பி டிகொஸ் ஆகியோரே யாழ்ப்பாணம் வந்துள்ளனர். (இ-3)

### நாடாளுமன்றம்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எட்டாம், ஒன்பதாம் நாடாளுமன்றங்கள் 1965ஆம், 1976ஆம், 1977ஆம், 1989ஆம் ஆண்டுகளிலும் ஆறாவது, ஏழாவது, எட்டாவது, ஒன்பதாவது நாடாளுமன்றங்களும் அமைக்கபட்டன. 10ஆவது நாடாளுமன்றம் 1994 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. (இ-க-3-5-7)

### பேருவளை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமது முகவரிடம் மூன்றரை இலட்சம் ரூபாவைச் செலுத்தி இருந்ததுடன் 21 நாள் கடல் பயணத்துக்கான பயண ஏற்பாடுகளையும் செய்திருந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை மேற்படி இளைஞர்கள் 32 பேரும் நேற்று பேருவளை நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர். (இ-7-4)

## கொழும்பில் அரசு ஆதரவு ஆர்ப்பாட்டம்

அரசுக்கு ஆதரவு தெரிவித்து நேற்றுப் பிற்பகல் கொழும்பு விட்டன் சுற்றுவட்டத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

இதில் அமைச்சர்களான அலவி மௌலானா, ரெஜி ரணதுங்க உட்படப்பலர் கலந்துகொண்டனர்.

## குண்டு வீச்சு

தென்மராட்சி,ஓக.19

மட்டுவில், சரசாலைப் பகுதிகளில் நேற்று முன்தினம் மாலை 7 மணியளவில் விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தின.

அதே சமயம் - சங்குப்பிட்டித் துறையின் வடக்குப்பகுதி குண்டு வீசிச் சேதமாக்கப்பட்டதாக விமானப் படை அறிவித்துள்ளது. (இ-க-117)

### ஒரேதடவையில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட பிரதம சிவில் அதிகாரி பிரிகேடியர் ரி.ஜி.திலகரத்ன அறிவித்துள்ளார்.

யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்தில் பதிவு செய்த சகலரும் முன்னுரிமை அடிப்படையில் இல்லாது பயணச் சீட்டை இன்று காலை 10 மணி முதல் யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. நாளையும் பயணச் சீட்டு வழங்கப்படும்.

யாழ். செயலக அதிகாரிகள் இதற்கான பயணச்சீட்டுக்களை வழங்குவர். சிற்றி ஒவ் றிங்கோ கப்பலில் பயணம் செய்வதற்கு பயணச் சீட்டுப் பெற்றவர்கள் அவற்றை மீளக் கையளித்துப் புதிய பயணச்சீட்டைப் பெற்று இந்தக் கப்பலில் செல்லமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் செவ்வாய், வியாழக் கிழமைகளில் வழமைபோல் சிற்றி ஒவ் றிங்கோ கப்பல் சேவையில் ஈடுபடும் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## சேவையை மீண்டும் ஆரம்பிக்கக் கோரிக்கை

கடந்த ஒன்பது மாதங்களாகத் தடைப்பட்டுள்ள குறிகாட்டுவானுக்கும் - நெடுந்தீவுக்கும் இடையிலான குமுதினி படகுச் சேவையை உடனடியாக ஆரம்பிக்குமாறு நெடுந்தீவு மக்கள் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஒன்பது மாத காலமாக சிறிய திருத்த வேலைகளுக்காக ஊர்காவற்றுறைத் துறைமுகத்தில் தரிக்க விடப்பட்டிருந்த இந்தப்படகின் திருத்த வேலைகள் கடந்த வாரம் முடிவடைந்துவிட்டதாக அறிவிக்கப்பட்ட போதிலும் இதுவரை சேவை மீளவும் ஆரம்பிக்கப்படவில்லை எனவும் - தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## அமெரிக்க குழு அடுத்தவாரம் இலங்கைக்கு

அமெரிக்கப் பிரதிநிதிகள் சபையைச் சேர்ந்த நான்கு உறுப்பினர்கள் அங்கம் வகிக்கும் குழு ஒன்று அடுத்த வாரம் இலங்கை வரவுள்ளதாக அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்தக் குழு இலங்கை இனப் பிரச்சினைத் தீர்வு மற்றும் வர்த்தக உறவு ஆகியன தொடர்பாக இங்கு பேச்சுக்களை நடத்தும். (இ-3-4)

### பலகல்லவுக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த அச்சுறுத்தல் விடுதலைப்புலிகளால் மட்டுமன்றி வேறு தரப்புக்களில் இருந்தும் விடுக்கப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. நேற்று முன்தினம் இரவு கூட இத்தகைய மிரட்டல் விடுக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. (இ-3)

### வேல்முருகு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளரான வேல்முருகு தங்கராசாவை தலைமை வேட்பாளராகக் கொண்டு வேட்பாளர்களை நிறுத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதே சமயம் - நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் வேல்முருகு தங்கராசா மத்திய குழு உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். (இ-3)

**DCS**

**COLLEGE OF COMPUTER TECHNOLOGY**

*(British ACP Recognized Training Centre)*

எமது நிறுவனத்தால் நடத்தப்பட்ட 2000ஆம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்தி பதிவுகளை மேற்கொண்டோருக்கான வகுப்புக்கள் 02-09-2000ஆம் திகதியன்று ஆரம்பமாகும். பதிவுகளை மேற்கொள்ளாதவர்கள் 31-08-2000க்கு முன்னர் பதிவுகளை மேற்கொண்டு ஆரம்பமாகும் புதிய பிரிவுகளில் இணைந்துகொள்ளவும்.

எமது நிறுவன புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றாமல் தற்போது ஆரம்பமாகும் புதிய பிரிவில் இணைய விரும்புபவர்களுக்கு விசேட சலுகை வழங்கப்பட விருப்பதால் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

எமது நிறுவன **S.L.C.D.L. 2000** பரீட்சை விரைவில் நடைபெறவுள்ளதால் பதிவினை உறுதிப்படுத்தி, பரீட்சைக்குத் தோற்றுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

DIRECTOR (AD.),

*DCS,*
*124/2, Palaly Road,*
*Thirunelvely.*

DCS,
N.M.M.V. Road,
Nelliaddy.

(C/12477)

**சிவரஞ்சன் ஸ்ரோர்ஸின் வேண்டுகோள்!**

120, 45, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

எமது ஸ்தாபனத்தில் பணிபுரிந்தவராகிய ப.திருவருட்செல்வம் (செல்வம் - கண்ணாடி) என்பவர் எமது ஸ்தாபனத்தில் இருந்து 05-08-2000 தொடக்கம் விலக்கப்பட்டுள்ளார். இவர் தொடர்ந்தும் எமது ஸ்தாபனத்தின் பெயரைக் கூறி பணம் வசூலித்துக் கொண்டு இருக்கிறார். எனவே இவருடனான கொடுக்கல் வாங்கல்களுக்கு நாம் பொறுப்பாளிகள் அல்லர்.

*உரிமையாளர்*
*யோ. சிவரஞ்சன்*

(77464)

## கண்ணீர் அஞ்சலி



எங்கள் பிரிய நண்பனும் கல்லூரி வளர்ச்சியில் அதீத அக்கறை கொண்டவருமான

ஏ.ஞானசேகரின் தந்தையார்

**நாகசுந்தரம் ஏகாம்பரம்**

(மூத்த வர்த்தகர், கல்வியங்காடு)

அவர்களின் மறைவினால் அவர்தம் குடும்பத்தினர் போன்றே நாமும் ஆழ்ந்த துயரடைந்துள்ளோம். அவர் ஆத்மா சாந்தி பெறுக.

நண்பனினது துயரில் பங்கு கொண்டு நிற்கும்.....

*பழைய மாணவர்கள்,*
(1988-89 உயர்தரப் பிரிவு)
யாழ். செங்குந்த இந்துக்கல்லூரி.

(77462)

## நீங்காத நினைவலையில் 6ஆம் ஆண்டு

அன்னை மடியில் 01 - 04 - 1954



ஆண்டவன் அடியில் 24 - 08 - 1994

**திருமதி சண்முகானந்தா சந்திரவதனி**

(ஆசிரியை, வீமன்காமம் மகாவித்தியாலயம், தெல்லிப்பழை)

திதி: 19-08-2000 சனிக்கிழமை

ஆண்டுகள் ஆறு ஓடினாலும்
எம் துயர் ஆறாதம்மா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
வண்ணை ஸ்ரீ விஸ்வலிங்க மகாகணபதி
கோயிலில் இன்று (19-08-2000) சனிக்கிழமை
காலை அபிஷேக ஆராதனை நடைபெறும்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

*உங்கள் பிரிவால் வாடும்*
கணவர்: சண்
மகன்: அகிலன்
சகோதரிகள்: மாலினிதேவி (U.K), கலாவாணி (U.K)
நடராசா மாமா,
உற்றார், உறவினர்.

*திரு: பா.சண்முகானந்தா,*
*'சர்மிலம்'*
*இலங்கை வங்கி ஒழுங்கை,*
*சுன்னாகம்.*

(77318)

**வாணி கல்வி நிறுவனம்**

சுன்னாகம்

**கணக்கீடு**

**A/L 2001 பங்குடைமை**

ஆரம்பம்: நாளை 20-08-2000 10.00 a.m.

**A/L 2002 தனிவியாபார முடிவுக்கணக்கு**

ஆரம்பம்: நாளை 20-08-2000 12.00 Noon

ஆசிரியர்:

**திரு. சி.தவா**
B.Com. (Hons) (Acc.Spl)

(77454)

2000 O/L

வடமராட்சியில்......

**MATHS PAPER CLASS**

**By:- Mr.M.PARAM**

ஆரம்பம்: 21-08-2000 2.30 p.m.

**STUDY CIRCLE**

*கொற்றாவத்தை, வல்வெட்டித்துறை.*

(77445)

**கபிரியேல் வைத்தியசாலை**
**மீண்டும் ஆரம்பம்**

டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகத்தில் இயங்கிவந்த டாக்டர் ஜி.ஜோர்ஜ் வைத்தியசாலை மீண்டும் ஆரம்பமாகி உள்ளது என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

*- நிர்வாகி*

(77419)

**சிற்றூர்தி சேவைச் சங்கம்**
**மாதகல் 787**

**அறிவித்தல்**

மேற்படி சங்கத்தில் தற்காலிகமாக புதிய பதிவுகள் எக்காரணம் கொண்டும் மேற்கொள்ளப்படமாட்டாது என்பதைச் சகலருக்கும் அறியத்தருகின்றோம்.

. தென்மராட்சி இடம்பெயர்வு சிற்றூர்திகளுக்கும் மேற்படி சங்கத்தில் தற்காலிக பதிவுகள் வழங்கியுள்ளதால் சிற்றூர்திகள் சேவையாற்ற முடியாத நிலை தோன்றியுள்ளது. ஆகையால் புதிய பதிவுகளும் பழைய அங்கத்தவர்களின் பதிவுகளும் தற்காலிகமாக பொதுச்சபையால் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என்பதைச் சகலருக்கும் அறியத்தருகின்றோம்.

*ஆ. சிவஅன்பு (மாதகல்)*
*செயலாளர் 787*

*அ.வெற்றிவேல்நாதன்*
*தலைவர் 787*

(77407)

**I.B.M.S.**

புலமைப்பரிசில் திட்டம் இணைக்கப்பட்டுள்ளது.

(C/12557)

**படிவம்**

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வேலையற்ற பட்டதாரிகள் பற்றிய விவரங்களைச் சேகரித்துக் கொள்வதற்கான விண்ணப்பப்படிவம் விற்பனையாகின்றது.

**பாரதி பதிப்பகம்,**
*430, காங்கேசன்துறை வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(C/12559)

**NCCA**
**வகுப்புக்கள்**

அரச அங்கீகாரம் பெற்ற NCCA - 2000 பரீட்சைக்கான இறுதிப்பிரிவொன்று அனேக மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க 14-08-2000 அன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதுவரை தம்மைப் பதிவு செய்து கொள்ளாத மாணவர்கள் உடனடியாகத் தம்மைப் பதிவு செய்து விரிவுரைகளில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்படுகிறீர்கள்.

*இயக்குநர்,*
IIS
யாழ்ப்பாணம்.

(C/12546)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19-08-2000இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.